சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

VOL V. | MADRAS MARCH 1910. | NO. 8.
தொகுதி ரு. | சென்னை மார்ச்சுமீ ௧௯௧௦. | பகுதி. 8.

ஜீவ காருண்யம்.

ஜீவகாருண்யமென்பது ஜீவன்—காருண்யம் என்கிற இரு சொற்களாலாய ஒரு சொல். ஜீவன் என்பதற்கு ஆன்மா உயிர் என்று கூறுவதுண்டு. காருண்ய மென்பது கிருபை, அருள், தயை இரக்கம் என்று சொல்லப்படுவது. ஆகவே ஜீவகாருண்ய மென்பது ஜீவனிடத்துக்காட்டப்படும் இரக்கமென்று பொருள்படும். கொல்லாமை, வெகுளாமை, துன்பஞ் செய்யாமை முதலியவைகள் இந்த ஜீவகாருண்யத்துள் அடங்கும். உலகத்தில் பாபம் ஒருவனுக்குண்டாவது பலவழிகளிலாயினும் ஜீவஹிம்சையால் ஏற்படுவதையே ஆதிகாரணமாகச் சொல்லவேண்டும். இதுபோல் ஒருவனுக்குப் புண்ணியம் பலவகையிற் கிடைக்கக் கூடியதாயினும் இந்த ஜீவகாருண்யத்தினால் ஏற்படுவதே சிலாக்கியம். ஏனெனில் இதனினும் சிறந்த அறம் ஒன்றில்லை. இது சர்வமதஸ்தர்களுக்கும் சம்மதமான அறம். இதனினும் சிறந்த அறம் ஒன்று உண்டென்று எந்நூற்களிலும் கண்டறியோம். மற்றுக்கேட்டுமறியோம்.

"அல்லல் அருளாள்வார்க்கில்லை வளிவழங்கு மல்லல்மா ஞாலங் கரி" என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறியபடி ஜீவர்களிடத்திரக்கமாகிய அருள் உடையவர்களுக்கு இம்மையில் அதாவது இப்பூவுலகில் துன்பமென்பது இல்லையாம். அதற்குச்சாட்சி, இந்த உலகத்தில் இரக்கமுடைய பெரியோர்கள் துன்பமடையாதிருப்பதைப் பிரத்தியட்சத்தில் காண்பதேயாகும் எனக்கூறுவதாலுங் கண்டுணர்க. ஜீவகாருண்யம் என்கிற அருட்செல்வத்தையுடைய

வர்களுக்கு இம்மைப்பயனன்றி மறுமைப்பயனும் உண்டு என்பதை "அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை, யிருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்" என்ற செய்யுளால் ஆசிரியர் திருவள்ளுவர் கூறியுள்ளதையும் காண்க. ஒருவனிடத்து ஏனைய அறங்களெல்லாம் இருந்தும் இந்த ஜீவகாருண்யமென்பது இல்லையாயின் அவ்வறங்களனைத்தும் பயனற்றதாய்விடும். இவ்வறமொன்றுமே மற்றைய வறங்களின் பயன்களை யளிக்கக்கூடியது. இந்தப்பேரறமாகிய ஜீவகாருண்யம் எவனிடத்து இல்லையோ அவனை மனிதனெனமதிப்பது சிறிதுந் தகாது. அவனை மிருகத்திலும் கடையாகவே கொள்ளவேண்டும். ஜீவகாருண்ய முள்ளவன் ஒரு உயிரைத் தன் கையால் இம்சைசெய்யக்கருதான். பிறர் செய்யும் ஜீவஹிம்சையைக் கண்ணுற்காணவும் சகியான். காண்பானேயாகில் அவன் தேகம் நடுங்கும். அவன் தனக்குப்பிறரால் நேரிடும் செய்கைகளில் எவைகளைத் தான் துன்பமாகக்கருதுகிறானோ அவைகளைத் தான் பிறஜீவனுக்குச் செய்ய அஞ்சுவான். ஒருவேளை தன் மனது பிற உயிர்களைக்கோபிக்கவும், துன்புறுத்தவும் எண்ணுமாகில், உடனே அவன் தன் மனதைக் கண்டித்து, அதை அடக்கி, அக்கொடிய வழிகளிற் செல்லவொட்டாமற்றடுப்பான். இதனால் அவனுக்குப்பேரும் புகழும் இகத்தில் பெருகுவதன்றிப்பரத்திலும் நன்மையுண்டாம். மனிதவகுப்பாருள் சிலர் மனிதரை யொழித்து ஏனையவர்களை இம்சித்தலாலும் கொல்லுதலாலும் பாபமில்லைஎன்று கூறிக்கொன்று தின்கிறார்கள். இது மனிதர்க்குமட்டுமே ஆத்மா உள்ளதென்றும் மற்றப்பிராணிகளுக்கு ஆத்மாயில்லை என்றும் கூறித்திரிபவர்களுடைய கொள்கையாம். ஆத்ம இலட்சணத்தைப்பற்றி மற்றொருமுறை கூறுவாம். எல்லா பிராணிகளிடத்திலும் ஆத்மாவுண்டு. ஆகையால், கொசுகு, மோட்டுப் பூச்சி முதலிய அற்ப ஜந்துக்களைக்கொல்லுதலும் பாவமாம். ஜீவன்களில் ஓரறிவுமுதல் ஐயறிவுவரையில் பாகுபாடுடையன. அதாது பரிச உணர்ச்சியாகிய ஓரறிவுடைய ஜீவன்கள் மரம் செடி கொடிகளாகியதாவரங்களேயாம். சங்கு சிப்பி முதலியவை பரிசத்தோடுரஸ உணர்ச்சியுமுள்ள ஈரறிவுயிர்களாம். எறும்பு கரையான் முதலியஅநந்தகோடி ஜீவன்கள் பரிஸம் ரசம் என்கிற இவ்விரண்டு உணர்ச்சி

யோடுவாசனையையும் அறியும் மூவறிவுயிர்களாம். வண்டு ஈ முதலியவை அம்மூன்றினோடு உருவத்தையுமறிகிற நாலறிவுயிர்கள். பசு பக்ஷியாதி எனைய ஜீவன்கள் அந்நான்கினோடு சத்தத்தையுமறிகிற ஐயறிவுயிர்கள். இனித்தேவர் மக்கள் நரகர் முதலாயினோர் மேற் கூறப்பட்ட ஐயுணர்வை யன்றி மனநி அந்தக் கரணங்களுமுடைய ஆறறிவுடையாரெனப்படுவர். இவர்கள் இது நன்மை இது தீமை என்பன வாதிபேதங்களையறியுந் தன்மையுடையவராதலால், இவர்களை மற்றெல்லா வுயிர்களிலும் மேன்மை பெற்றவர்கள். இவர்களுக்கே பரம்பொருளைத் தவம் யோகம் முதலியவைகளால் கண்டறியத்தக்க ஆற்றலுண்டு. இவர்கள் ஜீவஹிம்சை செய்து கொன்று தின்னத்தலைப் படுவார்களாயின், கண்ணுக்குத்தென்படும் பிராணிகளைப் பிடித்துத் தின்னும் புலி சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களுக்கும் இவர்களுக்கும் பேதம் கூறுவதெங்ஙனம்? ஆகையால் ஜீவராசிகளுக்கெல்லாம் மேம்பட்டவர்களாகிய நாம் பிற ஜீவன்களைச்சிறிதும் இம்சியாமலிருப்பதே இகபரமிரண்டிலும் நன்மை பயக்குமெனவறிந்து, நல்வழி சென்றுய்வோமாக.

உடையது விளம்பேல்.

ஆத்திசூடி விருத்தியுரை. (தொடர்ச்சி)

(ப—ரை) உடையது-நீ செய்துள்ள தருமத்தை, விளம்பேல் பிறரறியும்படி சொல்லாதே.

(பொ—ரை) நீ செய்துள்ள தருமத்தைப் பிறரிடத்திற் சொல்லாதே.

(வி—ரை) தான் செய்த தருமத்தைப் பிறரிடத்திற் புகழ்ந்து பேசினுல் அந்த தருமபலன் அதனோடழிந்துபோமே யன்றிப் பலன் தராது. ஒருவன் தான் செய்த நல்ல செய்கை, தானம், தான் கற்றகல்வி, யிம்மூன்றையுந்தானே புகழ்ந்து பேசினுல்,அவை பலன் தாராமலழிந்துபோம். தன்னைத் தானே புகழ்ந்து பேசினுல் ஒளி (பெருமை) மழுங்கிவிடுகிறது. தானஞ் செய்தபின் அதைக்குறித்து விசனப்பட்டாலும் நரகதுன்பத்தையடைகிறான். ஆதலால் தான் செய்த தருமத்தைப் பிறரறியச்சொல்லிக் கொள்ளக்கூடாதென்று

ஸ்மிருதிகள் கூறின. "தமரேயும் தம்மைப்புகழ்ந்துரைக்கும் போழ்தில், அமராததனை யகற்றலேவேண்டும், அமையாரும் வெற்பவணியாரே தன்னைத், தமவேனுங்கொள்ளாக்கலம்" இனி தானுடைய பொருள், தனது இரகசிய முதலியவற்றைப் பிறரறியக்கூறினால் இம்மைப்பயனுக்கிடையூறுண்டாய்த் துன்பமடைய நேருமென்று இலௌகிக நெறியையு மிதனுள் அடக்கிக் கூறினரென்றுங்கொள்க.

ஊக்கமது கைவிடேல்.

(ப—ரை) ஊக்கமது—(நீ) மன உறுதியை, கைவிடேல்—விட்டு விடாதே.

(பொ—ரை) (நீ) மன உறுதியை விட்டுவிடாதே.

(வி—ரை) ஊக்கம் அது என்பதில் அது என்பதற்கு வேறு பொருளில்லாமையால் பகுதிப்பொருள் விகுதியென்க. ஊக்கம், மன உறுதி அல்லது உற்சாகம், "மனமெலிவின்றிவினைசெயற்கட்கிளர்ச்சியுடைத்தாதல்" என்றார் பரிமேலழகர். எந்தக்காரியமானாலும் மன உற்சாகந்தப்பிச்செய்தால் அது பயன்படாமலொழியுமாதலால் அறம்புரிவதில், ஊக்கத்தைவிடாதே யென்று கூறினர். "நலமொன்றடைதற் குறுமிடையூறு நாதனே பலவுளவன்றே" என்றதனால் நற்செய்கையாகிய தருமத்திற்கு இடத்தாலும் பொருளாலும் பல இடையூறுகள் நேரிடும். அன்றியும் அறம்புரிவான் அதன் பயனையுடனே யடைவதில்லை. இவைகளால் அறம்புரிவதில் மனம் சோர்வடையும். ஆயினுமதை விடாமுயற்சியோடு செய்கவென்றதாயிற்று. இம்மைப்பயனை அடைதற்கும் ஊக்கம் அவசியம் வேண்டப்படும். இதனைத்திருக்குறள் ஊக்கமுடைமை, மடியின்மை, (சோம்பலின்மை) ஆள்வினையுடைமை (முயற்சியுடைத்தாயிருத்தல்) என மூன்று அதிகாரங்களால் விளக்கிற்று. ஊக்கமில்லாவிட்டால் எடுத்தகருமம் முடித்தலருமை யென்றும், ஊக்கமுண்டானபோதும் சோம்பலுண்டாயினும், சோம்பல் நீங்கிய வழி முயற்சியில்லாவிடினும் எடுத்தகருமமுடிப்பதுகூடாதென்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தங்காட்டினர் பரிமேலழகர். அம்மூன்றையும் ஔவையார் ஊக்கமென்பதுள்ளடக்கி யிங்குகூறினர். வேறிடத்தில் "ஊக்கமுடைமை

ஆக்கத்திற்கழகு" "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" "முயற்சி யுடையோரிகழ்ச்சியடையார்" என்றுங் கூறியிருத்தலாலும் இந் நூலுள்ளும் "சோம்பித்திரியேல்" என்று கூறுதலாலும் இதற்கு மதுவே கருத்தாகக்கொள்க. இதுவும் அறத்துப்பால் பொதுப்பா லிரண்டிற்கும்பொது. (கூ)

வரகவி திரு- அ-சுப்பிரமணிய பாரதி.

வஸ்திரம்.

நாகரிக மிகுந்த இந்நாளில் ஜனங்கள் விதவிதமான உயர்ந்த வஸ்திரங்கள் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் நமது முன் னோர்களோ பல்லாயிரம் வருடங்களுக்கு முன் நாகரிகமான உடை களைத் தரிக்காமல் காட்டுமிருகங்களின் தோல்களினலாகிய உடுப்பு களைப் பெரும்பாலும் தரித்துக்கொண்டார்கள். இதை நாம் பிரத்தி யக்ஷமாகப் பார்க்கவேண்டுமென்றால், இந்தியாவில் சிற்சில இடங் களில் காட்டில் வசிக்கும் நாகரிகமற்ற ஜனங்களைப்பார்த்தால், தெரியவரும். இந்த விதமான நடைகளினின்று தான் நாம் ஒரு வாறு விர்த்தியடைந்து தற்காலத்தில் நாகரிகமாக உடுத்துக் கொள்ளுகிறோம்.

இப்படி கொஞ்ச காலம் கழிந்த பின்னர் பிரஜைகள் சிறிது நாகரிகத்தையடைந்து தங்கள் தோலினலாகிய உடையை மாற்றிக்கொள்ள முயன்றார்கள். தன்னுடைய அந்தஸ்துக்கு தக்கபடி கொஞ்சம் சீர்திருத்தி உடையை யுடுத்தவேண்டி தோலி னலாகிய உடையை விட்டுவிட்டு மயிர் சம்பந்தமான உடையை உடுத்தார்கள். சர்மத்தினல் உடையானது மயிரை நனையவைத்து கயிறுகளின் உதவியால் நெய்துகொள்வதே. இந்தவிதமாக உடையை சீர்திருத்தி கம்பளி வஸ்திரங்கள் நெய்தார்கள். அக் காலத்தில் நெய்த கம்பளி வஸ்திரங்களைப் பார்த்தால் நாம் கூட அதிக ஆச்சரியப்படுவோம். ஏனென்றால் அவைகள் அவ்வளவு நேர்த்தியாக நெய்யப்பட்டுவந்தன. இந்த மயிர் வஸ்திரங்களைத் தரித் துக்கொண்டதுதான் வஸ்திரத்தில் இரண்டாவது விதமான நாகரிக

மாகும். இந்த சமயத்தில் ஜனங்கள் கொஞ்சங்கொஞ்சமாய் நாகரி கத்திற்கு வந்து கொண்டிருந்தார்களென்பதை யறிபவும். இவ்வித மாக நடந்தது நமது இந்தியாவில் மாத்திரம் அன்று. இப்பூவுலகத் திலே இதேவிதமாகத்தான் நடந்தது என்பதை அறியவும்.

சிறிதுகாலம் சென்றபின் மயிரை நூலாகச் செய்யத்தெரிந்து கொள்ளும் விதத்தைக் கண்டு பிடித்தார்கள். மயிரினல் வஸ்தி ரம் நெய்வது அப்பொழுது மிகப்பிரசித்தி பெற்றிருந்தது. கம் பளி வஸ்திரம் நெய்து கொள்ளும் விதத்தை ஜனங்கள் கண்டுபிடி த்தவுடன் நானுவித மிருகங்களினின்றும் மயிரைக் கத்தரித்து தரி யில் கொடுத்து வஸ்திரங்களாக நெய்து வந்தார்கள். ஆடுகளைத்தவிர கம்பளி கொடுக்கும் மிருகங்கள் அநேகமிருக்கின்றன. தென் ஆப் பிரிக்காவிலுள்ள "பெரு" என்னும் தேசத்தின் "ஆண்டிஸ்" என் னும் மலைகளின் சாரல்களில் மாத்திரம்தென்படும் ஆல்பாகா, லாமா என்று ஜனங்களால் சொல்லப்படும் ஆடுகளினின்றும், வெகு நேர்த் தியானதும் விலையுயர்ந்ததுமான ரோமம் கத்திரித்தெடுக்கிறார்கள். இவைகளுக்குள் வித்தியாசம்யாதெனில், ஆல்பாகா என்பது பட்டு ப்போலவிருக்கும். இதை உஷ்ண பிரதேசங்களில் வசிக்கும் ஜனங் கள் வஸ்திரமாக நெய்து உபயோகப்படுத்துவார்கள். ஆனல் "லாமா" வின் ரோமமானது மிருதுவானது. பட்டுப்போலிராது. இது உயர்ந்த சால்வைகளாக நெய்து கொள்ள உபயோகப்படும். இவைகளிரண்டைத் தவிரவும் துருக்கிதேசத்தில் வாசம் செய்யும் "அங்கோரா" ஆடுகளினின்றும், காஷ்மீரத்தில் சஞ்சரிக்கும் ஆடுக ளினின்றும் ரோமம் ஏராளமாக எடுக்கப்பட்டு நெய்யப்படுகின்றது. "அங்கோரா" ஆடுகளினின்றும் எடுக்கும் மயிர் அதிக வெள்ளையா யிருக்கும். இதைச் சரிகை செய்கிறதற்காகப் பெரும்பாலும் ஜனங் கள் இக்காலத்தில் உபயோகிக்கிறார்கள். ஆனல் காஷ்மீரத்தில் காண ப்படும் ஆடுகளோ மெதுவானதும் பளபளப்புள்ளதுமான ரோமத் தைத்தருகின்றன. இதைப் பெரும்பாலும் உயர்ந்த சால்வைகளாக நெய்து கொள்ளுகிறார்கள். இதைத்தவிரவும் பட்டு வஸ்திரமாக உப யோகப்படுகின்றது. கம்பளி வஸ்திரத்தையும் பட்டு வஸ்திரத்தை யும் நம் முன்னோர்கள் போல் நாமும் அனுசரித்து வருவதோடு.

நாம் நாகரிகமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். இது தான் வித்தியாசம். பட்டைப்பற்றி முன் சஞ்சிகைகளில் வேண்டி யளவு சொல்லியிருப்பதால், அதைப்பற்றி இவ்விடத்தில் அதிக மாக எழுதாமல் நிறுத்தினோம். மிருகங்களினின்று மாத்திரம் நமக்கு, உடை உடுத்த வஸ்துக்கள் அகப்படுவதும் தவிர செடிக ளினின்றும் ஏராளமாக அகப்படுகின்றன.

இவைகள் சணலும் பருத்தியுமாம். சணலின் மேல் தோலிரு ந்து எடுக்கப்படும் நாரினாலும் பருத்தி நூலினாலும் வஸ்திரம் நெய்துகொள்ளுகிறோம். இந்த விதமாக உடுத்தல்தான் தற்காலத்து நாகரிகம். இது 5 வது பாகமாக உடை உடுத்தலில் கருதப்படும். சணலைப்பற்றியும் பருத்தியைப்பற்றியும் சவிஸ்தாரமாக அடுத்த மாதத்தில் வெளிவரும் சஞ்சிகையில் "சணலும் பருத்தியும்" என் னும் அங்கத்தில் எழுதப்படும். அதை நெய்வதில் ஜனங்கள் உப யோகிக்கும் யந்திரங்களையும் அவர்கள் படிப்படியாய்த் தேர்ச்சி யடைந்ததையும் இந்தியாவின் நெசவுடன் ஒப்பிட்டும் எழுதப்படும் என்பதையறிக.

எஸ். வி. அய்யர்.

ஹிதோபதேசம்.

ஒரு புத்திரன் தன் மாதாபிதாக்களுக்குச் செய்யவேண்டிய கடமையானது அவர்கள் வாக்கிய பரிபாலனமேயாகும். இதனை ஜகத்ரக்ஷகராகிய ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியே துன்பமுற்ற தம் தந் தையைக் காப்பதிலும் அவர் வாக்கிய பரிபாலனமே மேலென்று வனம் புகுந்து காட்டியருளியிருக்கின்றனர். ஸ்மிருதியிலும் சிரா த்த காண்டத்தில் 'மாதாபிதாக்களின் ஜீவதசையிலே அவர்கள் வாக்கியத்தைப் பரிபாலனம் செய்கிறவன் எவனோ, அவர்கள் இற ந்த பிறகு கயாவுக்குப் போய் பிண்டம் போட்டு தானம் பண்ணி அல்லது அநேகருக்குப் போஜனமளித்துச் சிராத்தம் செய்கிற வன் எவனோ அவன் தான் புத்திரன்" என்று கூறியிருக்கின்றது. தற்கால நாகரிகர் சிலர் மாதாபிதாக்களின் மகிமையை உணர்கிற தில்லை. அவர்களை அலட்சியஞ்செய்து அவர்கள் சொல்லுக்கும்

செவிசாய்ப்பதில்லை. இவர்கள் மஹாபாபத்துக்குள்ளாகி நரகப் பிராப்திக்குப் பாத்திரர்களாவார்களென்றறிக.

முகங்கடுகடுத்துச் சீறிச் சினந்து பஞ்ச பக்ஷ பரமான்ன மிடுவதிலும் இன்சொலால் உபசரித்து ஒருவனுக்குக் கூழிடுதலே மேலாம். ஆயிரம் யாகம்செய்வதிலும் ஒரு பொய்யுரைசொல்லாமையே மேன்மையாம். வெடுவெடுத்துப் பேசும் ஒரு அவிவேகியினுடைய சிநேகத்திலும் அவன் பகையே மேலாம். எவ்வளவோ வெகுமதிகள்செய்வதிலும் ஒருவனுக்கு அவன் தேவையான வேளைகண்டு அரைக்காசேனும் உதவி புரிதல் மேன்மையாம். யாசகங் கேட்டவனுக்கு உடனே ஏதாவது சாக்குச் சொல்லிப் பிறகுவா நாளைவா வென்றுசொல்வதிலும் இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்லி விடுவதேமேன்மை யாம். ஐசுவரியவானா யிருந்து நோயால் வருந்துவதிலும்நோயற்ற திடசரீரம் பெற்று தரித்திரனாயிருப்பதே மேலாம்.

உலகத்தில் அநேகர் தங்களுக்குச் செல்வமுண்டானபோது தெய்வத்தை மறந்து விடுகிறார்கள். இது பேசலாம் இது பேசக் கூடாதென்பதை யறிந்து பேசுவதில்லை. இவர்கள் பந்துக்கள் இவர்கள் சிநேகிதர்கள் என்பதையும் எண்ணிப் பார்ப்பதில்லை. தங்களுக்கு நேரிடும் வல்வினை இதுவென்பதையும் உணருகிறதில்லை. அவர்களுக்குக் கண்ணொளியும் மழுங்கி விடுகிறது. ஐசுவரியமென்னும் வியாதியால் இப்படிப்பட்ட தீங்குகளுக் குள்ளாகிறவர்களுக்கு வைத்திய சாஸ்திரத்தில் மருந்து கிடையாது. தரித்திரமே அவைகளை நிவர்த்திக்கக் கூடியது.

உலகில் ஒரு மனிதனுக்கு சில விஷயங்கள் கெடுதலாக இருந்த போதிலும் அதில் பிரியமிருக்கலாம். அதைப் பிசகென்று எடுத்துக்காட்டி அவ்வழியிற் செல்லாமல் விவேகிகள் தடுக்கவேண்டியது. ஆனால் அஹிதமாக இருந்தாலும் அதுவே ஹிதமானதென்று அவர்களிஷ்டத்தை யனுசரித்து ஸந்தோஷிப்பித்துப்பேசுபவர் உலகில் சுலபமாகக்கிடைப்பார்கள். அப்பிரியமானாலும்ஹிதத்தை கூறுபவரும் அதைக் கேட்பவரும் கிடைப்பது துர்லபம்.

லலிதாம்பிகை.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(1) அன்பர்களே ! நோய் என்றால் என்ன? அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்கள் உடம்பு நடுங்கவில்லையா?நம்மை நொய்யச்செய்வது நோய்; நையச்செய்வது நோய்; துன்பப்படுத்துவது நோய்; சரியான ஆகாரமெடுத்துக்கொண்டு நம்மை சௌக்கியமாயிருக்கச் செய்யாமல் தேகத்தின் பலவித உறுப்புக்களிலும், புகுந்துகொண்டு வருத்தப்படுத்தி நம்மை மரப்பாவைபோல் ஆடச் செய்வதும் நோய்.

(2) இந்நோய் பலவகைத்து. எல்லா ஜீவப்பிராணிகளுக்கும் உரித்து. ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, நிலவாழ்வன, வான்வாழ்வன என்ற இவைகள் மாத்திரமல்ல, கேவலம் ஜடமாய்த் தோன்றும் விருக்ஷங்கள் மற்றுமசையாப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் நோய் உண்டு. சில நோய்கள் சில பிராணிகளுக்கே சொந்தம். நோய்களின் பொதுவான சில குணாகுணங்களைச் சிறிது ஆராய்வோம்.

(3) மானிட ஜன்மம் எடுக்க எவ்வளவோ தவம் பண்ணியிருக்கவேணுமென்று சொல்லுவார்கள். தவமென்றால் எளிதல்ல.எல்லாவித கடுமையான பத்தியங்களையும் அனுசரித்துக்கொண்டு சரீர சௌக்கியங்களையும் கவனியாமல் மனதை நமக்கு எதில் ஆப்தமிருக்கிறதோ அதில் நிலைநிறுத்தி நெடுங்காலம் பரம்பொருளைத்தியானிப்பதே தவமாகும். இம்மாதிரி தவம் செய்தே மானுடராய் பிறக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பிறந்து நாம் வாழ்கிற காலத்திற்படும் கஷ்டங்களென்னே! என்னே? உடல் நடுங்குகிறது அவைகளை நினைக்குந்தோறும். அம்மம்ம! மனம்பதறுகிறதே வியாதியென்றால். ஆனால் வியாதி நம்மைஅணுகாதபடியிருக்கிறதா? பத்துவருஷம் இருபது வருஷம்வியாதியில்கஷ்டப்படும்மனிதர்களை நாம்கண்கூடாகக்கண்டதில்லையா?ஐயோ!என்னசெய்யலாம்.அப்படிப்பட்டவர்களைக் கண்டால் கண்ணீர் கண்களில் தாரைதாரையாய் சொரிகிறது. "பாவம்! வியாதியால் வருந்துகிறாள். என்ன பாவம் செய்தாளோ? யார் சூதோ? என்னகஷ்டம்கண்ணே

டுத்துப் பார்க்கக் கண் கூசுகிறதே! என்று நாம் எத்தனை தடவைக ளிலோ சொல்லியிருக்கிறோ மல்லவா? ஒருவர் கஷ்டப்படுவதைப் பார்க்க நாம் ஒருக்காலும் சகியோம். வியாதிக் காரரைக் கண்டால் நமக்கு இயற்கையிலேயே ஒருவிதமான பரிதாபம் பிறக்கிறது. இது தெய்வீகம் என்றே சொல்லவேண்டும். இந்த விஷயத்தில் ஜாதிமத வித்தியாசம் பாராட்டுகிறவன் மனிதனல்ல மிருகத்தினும் கேடு கெட்டவன்.

(4) நல்லது நோய் எவ்விதமாய் உண்டாகிறது? முக்கிய காரணம் அசுத்தம் என்பதே. நம் உடல், தாதுக்கள், நரம்புகள், எலும்புகள், மாமிசம் இவைகள் நிறைந்த ஒரு பை என்று நமது நூற்கள் கூறு கின்றன. மனிதன் ஒரு ரசாயன பிண்டம். அப்பிண்டத்தின் தன்மை சில மாறுபாடுகளை அடையவே வியாதிகள் உண்டாகின்றன. இவ் வியாதிகளை அழிக்கமுந்தியிருந்த தன்மைக்கு பிண்டத்தைக் கொ ண்டுவருவதே சரியான மார்க்கம் என்று சில மேற் புலவிஞ்ஞானி கள் வரைந்திருக்கின்றனர். ஒவ்வொரு க்ஷணமும் நமது உடலில் ஏதாவது ஒரு வேலை நடந்துகொண்டிருக்கிறது. இம்மாதிரியான வேலைகள் சரிவர நடக்கவேண்டும். வேலை மத்தியில் ஏதாவது ஒரு அசுத்தமான பொருள் அகப்பட்டு விட்டால் ஒரு குடம் பாலில் ஒருதுளி மோரை தெளித்தது போலாய்விடும். சகலவித பிணிகளுக்கும் ஸ்தலமாகும். தினம் முறைப்படி புகைவண்டிகள் தவறாமல் நம் நாட் டில் போய்க்கொண்டிருக்கின்றன. அவை நமக்கு ஆச்சரியமாயிரு க்கின்றன. அவைகள் போகும் இருப்புப்பாதை ஒழுங்காயிராமல் சிறிது கோணி விலகியிருந்தால் அவ்வழியில் போகும் வண்டிகள் என்ன பாடுபடும். வண்டிகளிலுள்ள மனிதர்கள் என்ன பாடு படு வார்கள். எல்லாம் சேதம். அதுபோலவே நமது உடலில் இருக்கும் உறுப்புகளெல்லாம் சரியான நிலைமைகளி லிருக்க வேண்டும். நாம் செய்யுங் காரியங்கள் சரியான மாதிரியாயிருக்கவேண்டும். முக் கியமாய் நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வசிக்குமிடம், அருந்தும் நீர் இவைகள் நிரம்பவும்சுத்தமாயிருக்கவேண்டும். இவை களில் ஒரு கெட்ட சிற்றுயிர் கலக்கப்பட்டிருந்தால் போதும் நாம் நெடுநாள் கஷ்டப்படுவதற்கு. ஆகையாலே இவ்விஷயங்களைப்

போதிக்கும் சுகாதார நூற்களை ஏராளமாய்க் கற்று, கற்றபடி நடக்க முயல்வது நமது முதற்கடமை யாகும்.

(5) இரண்டாவது நாடோறும் நாம் செய்யுங் கடமைகளையும் ஆகாராதிகளையும் காலம் தப்பாமல் அந்தந்த வேளைகளில் நடத்த *உஞற்றவேண்டும். நம்மவர்கள் இதை அனேகமாய்க்கவனிக்கிறார்களில்லை. தினம் தினம் இக்குறையினால் உண்டாகும் தீமைகளைகண்காணப் பார்த்துக் கேட்டிருந்தபோதிலும் அதை எவ்வாற்றானும் விலக்குகிறார்களில்லை. இதை முக்கியமாய் நமது பெண்கள் கவனிக்க வேண்டியதாயுளது. சில பெண்பாலர் "நமக்கு எதற்கு ஆகாரம்? ஏதோ கொஞ்சம் சாப்பிட்டால் போதும். எப்பொழுதுசாப்பிட்டாலென்ன? என்னமாவது சாப்பிடவேண்டும்" என்று சொல்லி அந்தப்படியே செய்துவிடுகிறார்கள். பின் படுகிற துன்பம் அவர்களுக்கே தெரியும். ஆத்மத்துரோகஞ் செய்தால் அப்போதே கேட்குமல்லவா? இது சிறிய விஷயமாயினும் மிகுந்தகவனத்தை வேண்டி நிற்கிறது. இதேமாதிரிஎல்லாவிஷயங்களிலுமிருக்கவேண்டும். முறைதப்பாமை, மிதம், பரிசுத்தம் ஆகிய இம்மூன்றும் நாம் செய்யும் செய்கைகளின் குணாதிசயங்களா யிருக்கவேண்டும்.

(6) இப்படி ஒருவரது செய்கைகளெல்லா மிருக்குமாகில் முக்காலே மூன்று வீசம் அவரைப் பிணி அணுகாது. பின்னர் சில கடுரமான நோய்களிருக்கின்றன. இவைகள் அடைந்துள்ள சிலரை நாம் தொட்டுவிட்டால் நம்மையும் அது பிடித்துவிடும். நாம் அதற்கு அனேகமாய் இரையாயும் ஆகிறோம். உதாரணமாக விஷசுரங்கண்ட நோயாளிக்குச் சிகிச்சை பண்ணும் வைத்தியர்கள் எப்படியோ தாங்களுமந்நோயைக்கொண்டுசிலகாலம்வருந்திக்கடைசியில்மாண்டு போகிறார்கள். இம்மாதிரியான வியாதிக்காரர்களுக்கு வைத்தியர்கள் மருந்து கொடுக்கக்கூடாதென்று சொன்னேனல்லேன். சிலர் கேவலம் பண ஆசைக்காகவே இம்மாதிரி செய்து உயிர் துறக்கலாம். ஆனால் சிலர் சுயநயமற்று "வியாதியஸ்தனும் ஒரு உயிர்ப்பிராணி. நமது சகோதரன்" என்ற பாவத்தோடு மருந்து கொடுக்கலாம்.

* உஞற்றல்—முயலுதல்.

பல உயிர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும் தன் உயிரை அப்பேர்ப்பட்ட அபாயகரமான ஸ்திதியிலிருத்தக்கூடாது என்பது நமது வாதம். அவர்களும் மிகப் பரிசுத்தமாயிருந்துவிட்டால் அனேகமாய் ஒன்றும் வருகிறதில்லை. பொதுவாக நாம் ஒட்டுவார் ஒட்டி வியாதியைக்கண்டால் பறப்பாம்பைக் கண்டு விலகுவதுபோல விலகவேண்டும்.

(7) ஆக உள்பரிசுத்தம், வெளி பரிசுத்தம் இந்த இரண்டுமே நம் வாழ் நாளுக்கு இரண்டுகண்கள். இவ்விரண்டுகண்களும் சரியானபடியிருந்து விட்டால், நமது பிறப்பின் பிரயோஜனத்தை அடைந்தவராவோம். அதாவது சுகவாழ்வு, நோயற்ற வாழ்வு என்பதாம். நோய் ஒன்றிருந்து விட்டால் மனிதனுக்குவேறு என்ன விருந்தும் உபகாரமாகாது. வாசிப்பவர்களே! ஒரு கோடீஸ்வரப் பிரபுவுக்கு என்ன செல்வமிருந்தாலும் அவன் வியாதியால் பிடிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு எவ்வளவு சுகம் இருக்குமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். எள்ளளவேனும் சுகம் கிடையாதென்று சொல்லமாட்டோம். அவனுக்கு தேகவியாதிகள் தவிரமனக்கவலைகள்எண்ணிறந்தன. சவலொழிந்ததுயில்என்றுவதுண்டா அவனுக்கு. ஆகையாலே பணக்காரர்களைப் பார்த்து நாம் அவர்களைப்போலிருக்கவேணுமென்று நினைக்கவேவேண்டாம். வெளிக்கு ஆடம்பரம்உள்ளுக்கு அவ்வளவும் ஓட்டை. மற்று இக்காலத்தில் சிலபாலியர்உளர். அவர்கள் தங்கள் உயிரை பரபாஷை கற்பதில் செலவிட்டு உடம்பு ஒடுங்கி தேகதிடமற்று ஒன்றுக்கு மாகாத கம்பாய் தங்கள் உடலை வைத்துக்கொள்ளுகிறார்கள். இல்லாதுபோனால் பாலியத்திலேயே தங்கள்உயிரை இழந்துவிடுகிறார்கள். இது மிதமற்றதனால் வந்தகேடு. நம் நாட்டுக்கே ஒரு நஷ்டம். என் செய்யலாம்!

(8) எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்குமளவில் ஒருவிதவியாதியுமில்லாமல் திருப்தியுடன் வாழ்தலே குறைவற்ற செல்வத்தையுடையவராய் விளங்குதலாகும். "நோய்க்கிடங்கொடேல்" என்றுசொல்லிப் போந்தார் நமது மதுரமொழி ஔவைப் பிராட்டியாரும். இடங்கொடுத்தால் "பிறகு மனைக்குத் தாவாத்தான்". ஆதலின் நாமெல்லோரும் நோயற்ற வாழ்வைத் தேட முயன்றும் மற்றவர்

களையும் தேடச்செய்வோமாக. இவ்விஷயத்தில் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் நமக்கு உதவி புரிந்து நம்மைக் காத்தருள் வாராக.—

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழாஅ ரெனின்.

கடை கூடா வீரன்.
பி. ஏ.

கவிசிகாமணியாகிய காளிதாஸர்.

(தொடர்ச்சி)

தான் நினைத்தபடி ராஜகுமாரிக்கு முட்டாளொருவனை மணஞ் செய்வித்தாயிற்றென்று மந்திரி மட்டில்லாமல் மனமகிழ்ந் திருந்தான். விதியை மதியால் வெல்லமுடியுமா? விவாஹ மஹோற் சவம் விமர்சையுடன் நடந்தேறிற்று. அந்தி வேளையாயிற்று. மந்த மாருதம் வீசுகின்றது. அம்புலியுதித்தான். அதிரமணீயமான நிலவு. சிறுவர்களெல்லோரும் சிரித்து விளையாடிக்கொண்டு சந்திரி கையில் சந்தோஷமாய்க் குதிக்கிறார்கள். மணியத்தாயிற்று. இப் பொழுது வீதியில் ஒருவரையுங்காணோம். இச்சமயத்தில் இராஜ குமாரி அதிமோஹனரூபத்துடன் கையில் ஓர் கனகபாத்திரத்தில் இனியகனிகளும் மற்றோர் பாத்திரத்தில் புதிதாய்க்கறந்து காய்ச் சினபாலும் எடுத்துக்கொண்டு லஜ்ஜையினால் சற்று நின்று நின்று காதலனைக்காணும் ஆவலினால் சற்றுமுன்சென்றும், மெல்லமெல்ல அன்னம்போல் நடந்து சயன கிருகத்தை யடைந்தாள். தனக்கு முன்னரே அங்குவந்து சயனித்திருந்த கணவனைக்கண்டாள். சற்று மௌனமாக நின்றாள். ஒன்றையும் காணோம். குறட்டை மட்டும் வரவர அதிகமாகக்கேட்கத் துவக்கிற்று. "அரஸிகசிகாமணிபோல் இவன் இவ்வண்ணம் துயிலுகின்றானே! இதென்னவோ ஒன்றும் நன்றாய்த்தோன்ற வில்லையே! என்றாலும் அவ்வளவு சீக்கிரத்தில் ஒன்றையும் தீர்மானஞ்செய்து விடமுடியாது. பார்ப்போம். ஓர் வேளை பரிகாச நித்திரைசெய்யலாம்" என்றுயோசித்துக்கொஞ்சம் அச்சத்துடனும் நாணத்துடனும் மெதுவாக அவனதுசமீபத்திற்கு

வந்தாள். இவளது சிருங்காரங்களுக்கெல்லாம் மாப்பிள்ளையிவனு? ஐயோபாவம்! வெயிலிலலேந்து திரிந்து வியர்வை நீர்பெருக நேற்று மத்தியானம் வரையில் காட்டிற் பட்டகஷ்டம் யாருக்குத்தெரியும்? தேக ஸ்மரணையின்றி தூங்குகின்முன். சிருங்காரரஸமே மங்கையுரு வெடுத்து மாநிலத்தின் கண் மன்னனுக்குமகளாய்த் தோன்றியிருப்பது போன்ற அப்பெண்ணரசி, குலமகளிர்க்குரிய சில சமிக்ஞைகளைச்செய்தாள். கொஞ்சநேரம்மயிலிறகு கொண்டு செய்த விசிறியை மெல்லிய கையாலெடுத்து மெல்லமெல்ல விசினாள். வாசமுள்ள மல்லிகை மலர்களைப் பனிநீரில் தோய்த்து ஒன்றொன்றாய் அவன் மேற்போட்டாள் சில நிமிஷம். தான் எடுத்துவந்த கஸ்தூரி ஜவ்வாது, இவைகளை அவனது முகத்திலும் மார்பிலும் பூசினாள். "கலீர்! கலீர்!!" என்று பாதச் சிலம்பொலிக்க இங்குமங்கும் உலாவினாள். வீணையைக்கையிலேந்தி காதல்பெருகும் பாடல்களைப்பாடினாள். "கும், கும், கும்" என்று மேகமுழக்கம்போல் சற்று மிருதங்கம் வாசித்தாள். கோகிலம்போல் மதுரமான சுவரத்துடன் பாடினாள். ஆடினாள். உயிரிழந்த பிணத்தினிடம் என்ன செய்தாலென்ன! அதற்கு என்ன அலங்கரித்தாலென்ன! அங்கேதேனும் பயனுமுண்டோ? இவ்வளவுபசாரகங்களுக்கும் பிணமேனும் ஓர் வேளை உயிர்பெற்றெழுந்து விடுமோவென்று நமக்குச் சந்தேகமுண்டாகிறது. நம்முடைய மாப்பிள்ளை இவைகளுக்கெல்லாம் மயங்கியெழுந்து விடுவாரென்ற சந்தேகம் நமக்குச் சொற்பனத்திலும் சொற்பமும் இல்லையென்பது நிச்சயந்தான். என் செய்வாள் பாவம் ராஜகுமாரி! மனம்வாடினாள். தன்நாயகனிடம் ஸந்தேகங்கொண்டாள். "அடகஷ்டமே! எத்தனை ராஜகுமாரர்கள், எத்தனை ஸங்கீத வித்வான்கள், எத்தனை ரஸிகசிகாமணிகள் வந்தார்கள். அவர்களெல்லாம் எனது சௌந்தரியத்துக்கும் புத்திக்கும் தகுந்தவர்க ளல்லவென்று, பாவி நானவர்களை யவமதித்துத் திரஸ்கரித்தேனே! எனது கர்வத்தை யடக்குவதற்கே தெய்வமே இவ்வாறு செய்துவிட்டதா? இவரைக்காணும் பொழுது எனக்கு ஓர் வித விசுவாசமும் உண்டாகின்றது. அழகிலும் எனக்குக்குறைந்தவரல்ல, இவரதுஜாதி, தொழில், புத்திமுதலியவைகளை யறிவதற்கு

முன் நாம் ஒன்றும் அவசரப்படலாகாது." என்று பிரலாபித்துக் கொண்டு அவனைத்தனது கொடிபோன்ற கைகளாற்கட்டியெழுப்பி யுட்கார்த்தினாள். அப்பொழுதும் ஆடியாடி விழுகிறான். உடனே பக்கத்திலிருந்த பன்னீரைக்கையிலெடுத்துக் கண்களைத் துடைத் தாள். சற்று தூக்கம் தெளிந்தது. உடனே மாப்பிள்ளை மகா கோ பங்கொண்டு 'சி! சி சி! என்னையேன் எழுப்பினாய்?' என்று அடிக் கச் சென்றார். உடனே மன்னனின் புதல்வி, அவர்க்கு உபசார வார்த்தைகளுரைத்து அங்கு அழகிய சுவரின்மேல் மாட்டியிருக் கும் அநேக அற்புதமான பெண்களின் படங்களையும் இன்னும் நானாவிதமான விசித்திரங்களையும் ஒவ்வொன்றாய்க் காண்பித்தாள். ஒன்றிலும் மாப்பிள்ளைக்கு மனம் பற்றவில்லை. கடைசியில் இரண்டு கொழுத்த எருமைக்கடாக்கள் சண்டைபோடுவது போல் எழுதி யிருந்த ஓர் பெரியபடத்தைக் காண்பித்தாள். உடனே தன்னை யறியாத ஆநந்தமும் ஆவேசமும் உண்டாய் விட்டது மாப்பிள்ளை க்கு. சிரித்தார் பிரமாதமாய். பக்கத்தில் வைத்திருந்தஅருமையான கனிகளைக் கற்களென்றெண்ணி எருமைகளின் மேல் ஒவ்வொன் றாய் எடுத்து "டிரீயோ! க்ர் க்ர் டிரீயோ!" என்று எறியத்துவக் கினார். ராஜபுத்திரி, மாப்பிள்ளை இடையர் ஜாதியில், மடையர் வமிசத்தில், மடமையுடன் அவதாரஞ் செய்திருக்கிறானென்று தெரிந்துகொண்டாள். தனக்கு நேர்ந்த ஆபத்தை யெண்ணி யெண்ணி மன முருகினாள். கடைசியாய்க் கணவனைக் கடுஞ்சொற்க ளால் "என் இளமையைக்கெடுக்கவந்த சண்டாளா! என் முன் நில்லாதே. ஊருக்கருகிலிருக்கும் காட்டிற்குச்சென்று கடுந்தவம் புரிந்து வாக்தேவியின் அனுக்கிரகம் பெற்றுவா" என்று வீட்டினின் றும் ஓட்டினாள். இவள் சொன்ன சொற்களில் ஒன்றின் பொருளா வது அவனுக்குத் தெரியவில்லை. வீட்டினின்றும் வெளியே போகச் சொன்னாளென்பதமட்டும் அறிந்துகொண்டான். சரேலென்று மாடியினின்றும் கீழேயிறங்கி யென்னென்னவோ தனக்குள்ளே யே புலம்பிக்கொண்டு பித்தனைப்போல் தான் போவதின்ன விடத் திற்கென்று மறியாமல் சென்றான். நிலவு நன்றாய்க்காய்கின்றது. ராஜகுமாரி வெகு நேரம் கண்ணீர் சொரிந்தாள். திங்களையும்

தென்றலையும் பழித்தாள். திலகத்தையும் அளகத்தையும் (கூந்தல்) அழித்தாள். கடகத்தையும் கங்கணத்தையும் உடைத்தாள். மாலையிற்சூடிய மாலையைக் கழற்றி மூலையி லெறிந்தாள். காலையிற் கொண்ட காதலின் கதியை நினைத்துக்கலங்கினாள்.

(வரும்) குப்புசாமிஐயர்.

பொறுமை.

மனிதன் அடையவேண்டிய குணங்களில் பொறுமை மிகவும் முக்கியமானது. அதுவே இவ்வுலகத்தின் கண் ஒருவனுக்குப் பெருமையையும், கீர்த்தியையும் உண்டாக்கும். எடுத்தகாரியத்தை முடிப்பதற்கதுவே முக்கியசாதனமாகும். கோபஞ்சண்டாளமென்றபடி பொறுமையாற் செயித்தவர்களுண்டே யொழியக் கோபத்தாற் செயித்தவர்கள் கிடையாது. இதினாலேதான் யோகிகளும் முனிவர்களும் பொறுமையை முக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். ஒருவனுக்கு எவ்வளவாபத்து வந்தகாலத்தும், எவ்வளவு இடர்வந்து நேரிடினும் பொறுமையை விடலாகாது, அது எவ்விதத் தீங்கினின்றுங் காப்பாற்றும். அதுவே மற்றகுணங்களுக்கெல்லாம் மூலாதாரம். பொறுமையில்லாவிடின் தர்மம், சத்தியம் முதலிய குணங்களெல்லாம் சீர்குலைந்து போய்விடும். பொறுமையால் ராமர், அரிச்சந்திரன், தர்மபுத்திரர் முதலிய மகான்கள் நற்பேறு பெற்று வாழ்ந்ததும், அஃதின்மையால் ராவண துரியோதனன் முதலியவர்கள் கெட்டதும் உலகமறிந்ததே. ஒருவனுக்கு எவ்வளவு திரவியம், பெருமை, மகிமை இவைகள் வந்துற்றாலும் இவைகளைக் காப்பாற்றி பிரசித்திபெறச் செய்வது பொறுமையேயாகும். அப்பொறுமையினால் வசிஷ்டர்நற்பேறுபெற்றார். பொறுமையில்லாமையால் விஸ்வாமித்திரர் அவஸ்தைப்படும்படி நேரிட்டது. நிழலினருமை வெயிலிற் போனாற் றெரிவதுபோல பொறுமையின் நன்மைகோபத்தின்கெடுதலை ஓரிற்றெள்ளிதிற் றெரியும்.

'சினத்தினால் வருந்தீமை திப்பிரப்பு
மனத்தினீடிய மருட்கையும் வருமையுநரகு
மனைத்து நல்கிடுபாதலாலொரு பொழுதயர்த்துந்
தனக்கு நல்லவன் வரைப்பனோ சீற்றமாந்தழலை,

2. நம்மை யார் என்னசொல்லினுந் தயையை மேற்கொண்டு பொறுத்தல்வேண்டும். வந்தவர் வாழ்த்தினும், வசையுரைக்கினுஞ் சந்தனம் பூசினுந் தசையைக்கொய்யினு மெல்லாம்விதியின்ப்பயனென்றறிதல்வேண்டும். ஆகையால் பொறையே ஞானத்துக்குக் காரணமாகும். மேலும் பொறுமையால் அடக்க முண்டாகும். அடக்கமிருப்பின் எல்லாம் நிதானித்துச்செய்தாலாகிய மேலான குணமுண்டாகும். இது நம்மை எவ்விதப்பிழையிலுஞ் செல்ல விடாது காப்பாற்றும். பொறுமைக்கு இவ்வித மேன்மைகளெல்லா மிருத்தலால் யாருமிதை யனுஷ்டிக்க வேண்டியது.

3. இது ஆடவர்களுக்கு எவ்வளவு இன்றியமையாததோ அதைவிடப்பதின்மடங்கு ஸ்திரீகளுக்குமின்றியமையாதது. இல்லறதர்மம் சீர்பெற நடந்தேறுவது இக்குணத்தினுலேதான். கணவன்பிழைசெய்யின் மனைவிபொறுத்தலும், மனைவி பிழைத்தா லாடவன்பொருத்தலு மியல்பாயிருந்தால்தான் கிருகஸ்தாசிரம தர்மம் சரிவரநடக்கும். இல்லாவிடின் வீட்டில் எப்போதுமொழுங்கு தவறியேயிருக்கும். தாயைப்போற் பிள்ளையென்றபடி தாய்மிகப் பொறுமை யுடையவளாயிருப்பின் மகன் அல்லது மகளும் அவர்களுடையசந்ததியும் அந்தத்தாயுடன் பழகிப் பொறுமையையே கைக்கொண்டிருப்பார்கள். இதேமாதிரி ஒவ்வொருதாயு மிருப்பாளாயின் நந்தேயத்திலொவ்வொருவருங் குணசிரோன்மணிகளாயிருப்பார்களென்பதற் கையமுண்டோ? இதைத்தவிற நமக்கு வேறுபலமும் வேண்டுமோ? பகீரதன் கங்கையையும், தர்மபுத்திரர் ராஜ்பத்தையும், வசிஷ்டர் கீர்த்தியையும் பொறையின் வன்மையாலன்றோவடைந்தார்கள். இதினுலேயே தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவனுர்

"இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மயையுள்
வன்மை மடவார்ப் பொறை" என்றும்
"ஒறுத்தாரை யொன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து"
என்றுங் கூறியுளார்.

4. சினத்தாற் றன்பதவியிழந்து வுலகில் சீரழிந்ததும், பாறையாற்பெருங்கீர்த்திபெற்று வாழ்ந்ததுமாகிய இரண்டு சினேகிதர்களுடைய சரித்திரம் அடுத்தசஞ்சிகையில் வரும்.

B A. வி. சிதம்பரம்.

பூகோளசாஸ்திரம் படிப்பிக்கு முறை.

(தொடர்ச்சி).

நதிகளின் உபயோகங்கள்.

இந்நதிகளி னுபயோகங்களைச் சுருக்கமாய்ச் சொல்லி இப் பாடத்தை முடிப்போம். நதிகள் மண்கல் எல்லாவற்றையும் புரட்டிக்கொண்டு போகின்றன என்றும் சொன்னோம். இம்மண்தான் பயிரிடும் நிலங்களுக்குச் செழிப்பைத்தருகின்றது. இந்நதிகள் பூமியில் இல்லாவிட்டால் மேடு எப்பொழுதும் மேடுதான், பள்ளம் எப்பொழுதும் பள்ளந்தான். ஆகவே பயிரிடுதல் என்றதொழிலே யிருந்திராது. இம்மாதிரி மண்கலந்து வருவதால் நீர் அனேக ஸமயங்களில் கலங்கிவருகிறது. அக்காலங்களில்தான் நிலங்களுக்கு இக்கலங்கினநீரைப் பாய்ச்சிச் செழிப்பான மண்ணைத் தங்கள் தங்கள் நிலங்களுக்குச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இத்தகைய மண் கங்கைநதியில் வருஷாவருஷம் கரைந்துவருகிற பிரமாணத்தைப்பார்த்தால் 368 கோடி சதுரடியோடு ஒரு அடி கனமுள்ள விஸ்தீரணமாயிருக்கிறது. அதாவது 15 மைல் சதுரமுள்ள நிலத்திற்கு ஒருஅடி கனமுள்ள மண் ஒவ்வொரு வருஷமும் சேர்கிறது; இக்காரணம்பற்றித்தான் எவ்வளவு ஆழம் பங்காள தேசத்தில் பள்ளமாக்கினாலும் பாறை என்பது தட்டுப்படுவதே யில்லை. இம்மாதிரி பூமியின் விஸ்தீரணத்தை விவரிப்பதற்கு அடிக்கடி கூறுவது யாதெனில் 'கிழக்கேயிருந்து மேற்கே அரேபிக் கடல்வரை போனாலும் ஒருநாயின்மேல்போட ஒருசிறுகல் அகப்படுவது மகாதுர்லபம்' என்று வேடிக்கையாகச் சொல்லுவார்கள். இக்கங்கையைவிட மண்புரட்டிக்கொண்டு வரும் நதிகள் சிலவுள. அமெரிக்கா ஐக்யமாகாணங்களிலுள்ள மிஸிஸிபியோ ஆறுமடங்கு அதிகம். ஆகையால் இப்பூமியில் அதை மிகவும்செழிப்பான இடம் என்று கருதி ஏராளமாய் ஜனங்கள் குடியேறுகிறார்கள்.

இந்நதிகள் பிரவாக காலங்களில் ஏராளமாய்த்தண்ணீர்கொண்டு வந்து வேண்டுமென்ற குளங்கள் வாய்க்கால்கள் எல்லாவற்றையும் நிரப்பி தண்ணியில்லாக் காலங்களில் ஜனங்கள் கவலைப்படாமலிருக்கும்படி செய்கிறது. இப்படிச் செய்யுங்காலத்தில் சேதங்கள் உண்டாவதுண்டு. அம்மாதிரி நஷ்டங்களெல்லாம் ஒருமாதிரி மானிடர்களுக்குப் புத்தி யுரைப்பதுபோற் காணலாம். ஏதாவது

பாலம் உடைந்துவிட்டால் 'பாலம் பலமில்லை; கெட்டியான பாலம் ஒன்று கட்டவேண்டும்' என்று கூறுவதுபோலிருக்கும்.

அனேகநதிகள் மழைக்காலங்களில் தான் பிரவாகமாய்ச் செல்லும். சில நதிகள் கோடைக்காலங்களிலும் பிரவாகமாய்ச் செல்லக்கூடும். சூரியவெப்பத்தால் பனிக்கட்டி கரைந்து இந் நதிகளில் பிரவாகமாய் ஓடுகின்றது. இக்காரணத்தால் தான் கங்காநதி மழைநதி மாத்திரமல்ல, பனிநதி யென்றுஞ் சொல் லலாம். ஆகவே எப்பொழுதும் ஏராளமாய்த்தண்ணீர் ஓடிக் கப் பல்களுக்கு செல்லச் சாதனமாகிறது. சிலநதிகளை ஜனங்களுக்கு உபயோகமாகும்படி அணைகள் போட்டுத்தடுத்து அனேக கால் வாய்களாக நம் துரைத்தனத்தார் செய்திருக்கிறார்கள். இதனால் தான் மேலும் மேலும் பூமிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. பயிர் என்பது சொல்லக்கூடாத மதுரை ஜில்லாவில் நம் துரைத்தனத் தார் பெரியார் கால்வாய் என்று ஒன்று எற்படுத்தி எவ்வளவோ நிலங்களுக்குச் செழிப்பை யுண்டாக்கி யிருக்கிறார்கள். கட்டாந் தரையாய்க் கிடந்த அனேக பூமிகள் இப்பொழுது பயிரிடப்பட்டு வருகின்றன. இம்மாதிரி அணைகளால்தான் தேசங்களெல்லாம் செழித்துவருகின்றன. இத்தகைய அணைகள் ஏராளமாயுள்ள நதி கள் பலவுள. கங்கை காவேரி மிஸிஸிபி எல்லோநதி முதலானவை. இத்தகைய அணைகள் கட்டுவதற்கு ஏராளமாய்ப் பணம் செல வழிக்கவேண்டும். ஏனெனில் நதிகளைத்தடுப்பது என்றால் எளி தான காரியமன்று. அதற்கு ஏராளமாய்ப் பணம் செலவழித்துப் பலமான அணை போட்டால்மாத்திரம் பிரவாககாலத்தில் அதைச் சேதப்படுத்தாமல் நீர் மெதுவாய் மேலே செல்லும்.

இம்மாதிரி அணைகளால் பிரிக்கப்படும் வாய்க்கால்களால் அந்தந்த தேசம் நிலச்செழிப்பை யடைகிறது. ஆகவே கிருஷித் தொழில் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்றால், நதிகள் மிகவும் அவசியம். 'நீர்வளப்ப முண்டானால் நிலவளப்ப முண்டு' என்பது எல்லார்க்குந் தெரிந்தவிஷயம்.

இதைத்தவிர வேறொரு உபயோகமிருக்கிறது. நதிகள் வேக மாய் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு வருமிடத்தில் ஏதாவது சுழ லும் யந்தரத்தை வைத்தால் எப்பொழுதும் சுழன்றுகொண்டே ஏதாவது கைத்தொழிலிற்கு உபயோகமாகும். நம் சென்னை ராஜ தானியில் திருநெல்வேலி ஜில்லாவில் பாபநாசம் என்ற இடத்தில்

பஞ்சாபீஸ் இந்நீரருவியால் தான் நடத்தப்பட்டுவருகிறது. இத் துணைக்கருவி யில்லாவிட்டால் நீராவியால் நடத்தப்படவேண்டும். அதற்குப்பணச்செலவு மிகவும் அதிகம். எல்லாருக்கும் சிவஸமுத்திர காவேரியருவி என்ற சக்தி தெரிந்தவிஷயம். அச்சக்தியால் தான் கோலாரிலுள்ள தங்கச் சுரங்கங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு நீர்யந்திரமென்று பெயர். இந்நதியின் சக்தியால் தான் நிலக்கரியில்லாத தேசங்களில் வியாபாரம் செழித்துக் கொண்டு வருகிறது. ஸ்விட்ஸர்லாண்டு என்றதேசத்தில் கைக்கடியாரம் லட்சக்கணக்காய்ச் செய்துவருவதும் இச்சக்தியால்தான். ஸ்விடன் என்றதேசத்தில் நெருப்புப்பெட்டி கோடிக்கணக்காய்ச் செய்து வருவதும் இச்சக்தியால்தான். இந்நீர்ச்சக்திகளெல்லாவற்றிலும் பேர்போனது அமேரிக்கா தேசத்திலுள்ள நைகாரா அருவி (Niagara Falls). இந்நதி 160 அடி மேலிருந்து விழுகிறது. இச்சக்தியில் பத்திலொருபங்கை உபயோகப்படுத்தி சுமார் இருநூறு கம்பெனிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த ஐக்யமாகாணங்களிலுள்ள எல்லா யந்திரங்களையு மோட்டுவதற்குப் போதுமான சக்தி இந்நீரருவியி லிருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

நாலாவது உபயோகம் பின்வருமாறு சொல்லக்கூடும். ஏராளமாய்த் தண்ணீர் இருந்தால் கப்பல்கள் செல்லலாம். எளிதில் வியாபாரம் செழிக்கும். இதற்கு எப்பொழுதும் நதிகளில் தண்ணீர் இருக்கவேண்டும். அந்நதிகளும் ஆழமாயிருக்க வேண்டும். ஐரோப்பா கண்டம் வியாபாரத்தில் முதன்மையா யிருப்பதற்குக் காரணம் இது வென்றே கூறலாம். வங்காளதேசமும் இக்காரணம் பற்றித்தான் வியாபாரத்தில் முதன்மையாய்க் காணப்படுகிறது.

இம்மாதிரி நதிகளின் முக்கிய உபயோகமாகிய மேற்கூறிய விஷயங்களைக் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுத்தால் ஒரு பொழுதும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள். அடுத்தமாதப் பத்திரிகையில் மலைகளைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம்.

வி. ஜி. சுப்பய்யா வய்யர்,

பி. ஏ., எல். டி.

ரோமேஷ்சந்திரதத்தரின் சரித்திரம்.

உத்தியோகம் புருஷலட்சணம்.

அத்தியாயம் 3. (தொடர்ச்சி).

'உத்தியோகம் புருஷலட்சணம்' என்றவாக்கியத்தை சற்று உற்றுநோக்கினால் ராஜாங்க துரைத்தனத்தில் உத்யோகத்திலமர்ந்து ஜனங்களுக்கு நன்மை புரியவேண்டியது ஒவ்வொரு இந்திய புத்ரர்களின் கடமையென்று புலப்படுகிறது. ஆனால் நாம் இங்குமங்கும் சில ஸமயங்களில் தேசாபிமானிகள் என்று பிதற்றிக்கொண்டு ஊர் ஊராய்த்திரியுமனேகர்கள் ஸர்க்கார் உத்தியோகத்திலமர்ந்து ஜீவிப்பது மிகவும் கேவலம்; அவரவர் இம்மாதிரி ஜீவனஞ்செய்தல் தேசாபிமானிக்கு லட்சணமல்ல என்று தாறுமாறுப் பேசுவதைக் கேட்க மனம் பதைக்கிறது. ஆனால் ஒரு விஷயம் சற்று கவனிக்கவேண்டும்: அதாவது எல்லோரும் ஸர்க்கார் உத்தியோகம் வேண்டுமென்று ஆசைப்பட்டால் உத்தியோகத்திற்கு நாம் எங்கேபோவோம்; எல்லாருக்கும் உத்தியோகங் கிடைப்பது துர்லபம். அதற்காக உத்தியோகத்தி விருப்பவரைக் கேவலமாய்ப் பேசக்கூடாது. இம்மாதிரி கூறுவதற்குக் காரணத்தைக் கவனித்தால் பின்வருமாறு புலப்படுகிறது. ஸர்க்கார்வேலையிலமர்ந்தால் ஜனங்களுக்கு நன்மைபுரிய முடியாது; ஆதலின் நன்மைபுரியப் பிரியப்பட்டால் ஸர்க்கார் வேலையி லமராமல் ஒதுங்கி யிருக்கவேண்டியது. அப்பொழுதுதான் தேசாபிமானியென்ற பட்டப்பெயர் கிடைக்கக்கூடும். நம் கதாநாயகர் தத்தர் இம்மாதிரி புலம்புவர்க்கு நீவிரெல்லாம் வற்புறுத்துவது சுத்தப் பிசகு. ஸர்க்கார் உத்யோகத்திலமர்ந்து குடிகளுக்குத் திருப்திகரமாய் நன்மை புரிவதற்கு ஸாவகாசமுண்டு என்று உரைக்குமாறு உத்யோகத்திலமர்ந்து நீடூழிவாழ்ந்தார். 1871 ம் வருஷமுதல் 1882 வரை பங்காளத்திலுள்ள ஜில்லாக்களில் பலவித உத்யோகத்திலமர்ந்து ஜனங்களுக்கு நன்மை புரிந்துவந்தார். எப்பொழுதும் இந்தியாதுரைத்தனத்தை ஒருயந்திரத்திற்கு ஒப்பிடுவதுண்டு. அதன் காரணத்தைச்சற்று விவரிப்போமாக. ஏனெனில் முதல்முதல் இந்த இந்தியதுரைத்தனத்தை ஸரிவர ஏற்படுத்தினவர் இந்தியாவிலுள்ள ஜாதிவித்யாஸத்தை மனுமகாப்பிரபு எப்படி ஸ்திரமாய் ஏற்படுத்தினாரோ, அம்மாதிரியே ஏற்படுத்திவிட்டார். ஆகவே எவ்வளவு சீர்திருத்தஞ் செய்த

போதிலும் 'பழையகுருடி கதவைத்திறடி' என்ற மாதிரி பழைய இந்தியதுரைத்தனந்தான். இக்காரணம்பற்றித் தான் உத்தியோகஸ்தர் யாராயிருந்தாலும் சரி எப்பொழுதும் ஒரே மாதிரிதான் ஸர்க்காரால் நடத்தப்படுவர் என்று சொல்வதில் ஒருவித உண்மையிருக்கிறது என்பதற்கு ஆட்சேபமில்லை. இப்படியிருக்க நம்தத்தர் தம்முடையபரோபகாரகுணத்தை எம்மாதிரியாகவாவது உத்யோகத்தில் காட்டினரோவென்று பரீட்சிப்போம். இவர் அதிர்ஷ்டத்திற்கும் குணத்திற்குமேற்ப 1874 ம் வருஷம் நாதியா என்னும் ஜில்லாவில் பஞ்சநிவிர்த்தி உத்யோகத்திலமர்த்தப்பட்டார். இவ்வேலை மிகவும் கடினமானவேலை. ஏனெனில் ஸர்க்காருக்கும் ஸரிவரப் பார்க்கவேண்டும். பஞ்சத்தினால் தத்தளிக்கிறவர்களையும் திருப்திபண்ணவேண்டும். அதிகப்பணமும்செலவழிக்கக்கூடாது; ஜனங்களும் கூக்குரல் போடக்கூடாது. இத்தகையவேலை, ஆரம்பத்தில் அமரும் உத்யோகஸ்தருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக்கூடியது. சிலபஞ்ச உத்யோகஸ்தர் மாதிரி பணத்தைச் செலவழியாமல் ஜனங்களைபபட்டினிபோட்டு ஸர்க்காருக்கு காதுக்கின்பமாக ரிப்போர்டுகளை யனுப்பிக் காலத்தைக் கழிக்காமல் இவர்தம்மா லியன்றமட்டும் ஸர்க்காருக்கும் ஜனங்களுக்கும் ஒன்று போல் உழைத்து நல்ல கீர்த்தியையும் சுகத்தையு மடைந்தார்.

இந்தஸமயத்தில் தான் கங்கைநதி முகத்வாரத்தி லுள்ள தக்ஷிண ஷாபாஸ்பூர் என்ற தீவில் சரிவர அரசாட்சி செலுத்துவதற்கு இவர் ஏற்படுத்தப்பட்டார். அக்காலத்தில் அந்தத்தீவு எந்த ஸ்திதியில் இருந்தது என்பதை சற்றுக் கவனித்தால் எல்லார்மனதிற்கும் பரிதாபமாயிருக்கும். அத்தீவு முழுவதும் ஒருபெரிய ரணகளம்போல் எங்கேபார்த்தாலும் பிணங்கள் நிறைந்திருந்தன. மரங்களிலும் செடிகளிலும் செத்தபிணங்கள் தொங்கிக்கொண்டிருந்தன; குளங்களில் அனேகம் மிதந்தனர்; அலைகள் இப்பிணங்களை அங்குமிங்கும் ஓட்டிக்கொண்டிருந்தன; இதே ஸமயத்தில் காலராஎன்ற கொடும்பாவி தன் வேலையை ஆரம்பித்துவிட்டான்; வீடுகளெல்லாம் தினந்தினம், கொள்ளையடிக்கப்பட்டன. இத்துடன் பஞ்சமும் வந்துவிட்டது. ஆகவே இத்தகைய கஷ்டகாலத்தில் ஐந்துவருஷ ஸர்விஸ் கூடஇல்லாத பாலியதசையிலிருக்கும் நம்தத்தர் இந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டு ஒருவராகவே இந்தக் கஷ்டமான வேலையை எல்லாருக்குந் திருப்தியாய்ப்பார்த்துவந்தார். இவர்வீடுகளையெல்லாம் நூதனமாய்க்கட்டு

வித்தார்; களவு கலகம் எல்லாவற்றையும் நிறுத்தினார்; ஏழைகளுக்கு உடை உணவு முதலானவைகளை ஏற்பாடு செய்து அவர்களைக் காப்பாற்றினார். அந்தத்தீவில் அரசாட்சியையும் நிலை நிறுத்தினார்.

இத்தகைய மகாபுருஷர் எந்த உத்தியோகத்தில் அமர்ந்தாலும் ஆவலாதியன்னியில் ஒழுங்காய்ப் பார்த்துவந்தார் என்பதற்கு அவருக்குத்தவறாமல் கிடைத்த ப்ரோமஷனே அத்தாட்சியாகும்: சுதேசிகளுக்கு நம் ஸர்க்காரில் எளிதில் ஒருஜில்லாவின் அரசாட்சியைக் கொடுப்பதில்லை. அப்படியிருக்க ஒருமாகாணத்தின் அரசாட்சி ஒரு சுதேசிக்குக்கொடுத்து வந்தார்கள் என்றால், அவர் ஸாமர்த்தியத்தைப்பற்றி நாம் விவகரிக்க வேண்டியதில்லை.

இத்தகைய மஹாபுருஷர் உத்யோக ஆரம்பத்தில் ஏதாவது தப்புத் தவறாக கூறியிருப்பாரோ என்றாலோ;உண்டு என்று தெரியவருகிறது. அதாவது பங்காளதேசத்தில் கார்ன்வாலிஸ் என்ற மகாப்பிரவு உண்டாக்கிய நிலச்சீர் திருத்தமாகிய சாச்வதத்தீர்வைச் சட்டம் ஜனங்களுக்குக் கெடுதியை உண்டாக்கக் கூடியது. பங்காள ஜமீந்தார்கள் எல்லாரும் பொல்லாதவர்கள். ஆகையால் தேச நன்மையைக் கருதிச் சட்டத்தை மாற்றவேண்டியது என்று வற்புறுத்தி நம் தத்தர் கவர்ன்மெண்டுக்கு எழுதினார். அச்சமயத்தில் பங்காளத்திலுள்ள சிலபிரபுக்களுக்கு இவர் எழுதிய வியாஸம் திருப்தியைக் கொடுத்தபோதிலும் அனேகருக்குக் கோபத்தையுண்டுபண்ணிற்று இம்மாதிரி எழுதினவர் கொஞ்ச வருஷத்திற்குப் பிற்பாடு தம்முடைய தப்பிதத்தைக் கண்டுகொண்டார்; கண்டபிற்பாடு அனேக ஆதாரங்களைக்கொண்டு அம்மாதிரியான நிலச்சட்டம் ஜமீந்தார்களுக்கும் நன்மையைக் கொடுக்கிறது. கவர்ன்மெண்டுக்கும் லாபம்; ஏழைகளுக்கும் லாபம்; ஆகையால் இந்தியா ராஜ்யமுழுவதிலும் இந்நிலச் சட்டத்தையே ஏற்படுத்த வேண்டும் என்று எல்லோருக்கும் ஸந்தோஷத்தை யுண்டாக்குமாறு வற்புறுத்தி எழுதினார். இம்மாதிரியான சங்கதிகள் நம் தத்தர் கூறினார் என்றால் ஒருவரும் நம்பவேமாட்டார்கள். இம்மாதிரியே வெறொரு விஷயமிருக்கிறது. அதுவும் இவர்பாகர்கஞ்சு நியாயாதிபதியா யிருக்கும்பொழுது கூறினவிஷயம். அவ்விஷயத்தைப்பற்றிச் சற்று விவரித்துக் கூறவேண்டி இருப்பதால் இத்துடன் நிறுத்துவாம். அடுத்த சஞ்சிகையில் இவர் உத்யோக காலத்தில் செய்த செய்கைகளை வர்ணிப்போம்.

வி. ஜி. சுப்பய்யாவய்யர் **B. A., L. T.**

விக்டோரியாமகாராணியார் சரித்திர வினாவிடைகள்.

சக்கிரவர்த்தினியைப்படிக்கும் சிறுமியர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் உபயோகப்படும் படியான விக்டோரியா சக்கிரவர்த்தினியைக்குறித்த வினாவிடைகள்.

வினா:—இந்தியா தேசத்தில் எப்பொழுதாவது சக்கிரவர்த்திகளுண்டா?

விடை:—ஆம். முன் காலத்தில் அழியாப்புகழை நிலை நாட்டின அரிச்சந்திரன், நளன், புரூரவன், முசுகுந்தன், தசரதன் முதலான அனேக சக்கிரவர்த்திகளும் முடிமன்னர்களும் ஒருவர் பின்னொருவராய் நெடுங்காலம் உலகம் களிக்க அரசு புரிந்து வந்தார்களென்று அநேக கிரந்தங்களால் நாம் அறிகின்றோம்.

வினா:—நம் தேசத்தில் இங்கிலீஷ்காரர்கள் ஆளுகைக்கு முன் சுதேச மன்னர்களுக்குக் கஷ்டங்களுண்டா?

விடை:—ஆம். நமது துர்ப்பாக்கியத்தால் நம்தேசம் வலியிழந்து துருக்கர், ஆப்கானியர், மொகலாயரிற் சிலர் முதலான அனேக அன்னியதேசத்தாருக்குள்ளாகிப்பெரும்பாலும் அவரது கொடுங்கோலின்கீழ்நெடுங்காலம் ஆலையிற்கரும்புபோலவும், அலையில் துரும்புபோலவும் அடிபட்டுத் துயருற்று நம்முன்னோர் மிகவருந்தினார்கள் என்பதும் சரித்திரவாயிலாக நன்றாயறிகின்றோம்.

வினா:—சில கொடுங்கோலரசர்களுக்கும் இந்துஜன ஹிம்ஸகர்களுக்கும் உதாரணம் உண்டா?

விடை:—உண்டு. அவர்கள் பெயர் பின்வருமாறு:—

கிரந்தங்களில் துரியோதனன். சரித்திரங்களில், அல்லாவுதீன், டோக்ளாக், தாமர்லேன், ஒளரங்கசீப், நாதர்ஷா, டிப்புமுதலான எண்ணிறந்த கொடிய அரசர்கள்.

வினா:—இவ்வரசர்களையும் இவர்கள் செய்கைகளையும் நினைக்கும்போதும் சொல்லும்போதும் என்னஉண்டாகிறது?

விடை:—எண்ணியமனமும் சுடும். சொல்லியவாயும் வெந்துபோம்.

வினா:—நமக்கு இங்கிலீஷ் அரசாக்ஷியும் விக்டோரியாமஹாராணியவர்கள் சக்கிரவர்த்தினியாக வந்ததையும் எதற்கு ஒப்பிடலாகும்?

விடை:—இங்கிலீஷ் அரசாக்ஷி பரமதரித்திரனுக்கும் பணப்புதையல் கிடைத்தது போலும்

(2) விக்டோரியாமஹாராணியவர்கள் நமக்கு 1857ம் வருஷத்தில் சக்கிரவர்த்தினியாக வந்தது நாம் முற்பிறப்பினிற் செய்தபெரும் பயனன்றோ?

வினு:—விக்டோரியா சக்கிரவர்த்தினியாரவர்கள் நமக்குச்செய்த நன்மைகளை எண்ணுந் தோறும் என்ன உண்டாகிறது?

இன்னும் அடையவேண்டிய நன்மைகள் அனேகமிருப்பினும் இதுவரையில் அடைந்தபயன்களை எண்ணுந்தோறும் நன்றி உணர்ச்சியால் உள்ளம் கரைந்து கண்ணீர்பெருகி அவரது நற்குண நற்செய்கைகளை நினைத்து ஆனந்தியா திருக்கவுங் கூடுமோ?

இன்னும் வரும்.

கற்பின் மேன்மை.

1. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர், 'மகிராகுலன்' என்ற இளவரசன், காஸ்மீரதேசத்தின் பட்டத்திற்கு வந்தான். அவன் எப்பொழுதும் கெடுதல்செய்யப் பிரியமுள்ளவன். அவனுடைய பாட்டனுர் 'நரா என்பவர் எப்பொழுதும் கெடுதல்களையே புரிந்துவந்தார். இவர் நகரத்தில் நூற்றைம்பது வருஷங்கள்வரையில் கஷ்டங்களை அனுபவித்துப் பிறகு ஜனங்களை உபத்திரவித்து தேசங்களை நாசஞ்செய்ய 'மகிராகுலன்' என்ற பெயரோடு அவதரித்ததாக ஜனங்கள் இரகஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

2. ஒரு நாள் சயங்காலவேளையில், அவன் தன்னுடைய படகில் "சாந்தரகுல்யா" என்ற நதியில் பிரயாணம்செய்துகொண்டு வந்தான். அங்கு ஒரு பெரிய கற்பாறை இருந்தமைபற்றிப் படகைச் செலுத்தக் கூடவில்லை. ஆனல் அதை அப்பால் விடும்படி இவன் ஆக்ஞாபிக்கவே துடுப்புத்தள்ளுகிறவன் "புருவம்தடித்த" அபசகுனக்குறியைக் கண்டு, நடுங்கி, படகைச் செலுத்தினன்.

3. மறுநாள் அதிகாலையில் தன்னுடைய மந்திரிகளையும் அரண்மனையிலுள்ள வித்துவான்களையும் வருவித்து என்னுடைய அரண்மனையில் வசிப்பவர்களே! நேற்றிரவில் நான் அயர்ந்துநித்திரை செய்யும்போது ஒரு ரூபம் தோன்றிற்று. பிறகு ஓ மகிராகுலா! உனது ஸ்திரீகள் எவ்வளவு விபசாரிகளா யிருக்கிறார்கள் உனக்கு வெட்கமில்லையா? "சந்திர குல்யா" நதியானது குறுகியஒரிடத்தில் ஓர்பெரிய கற்பாறையிலிருந்து வருகிறது. அதில் ஒருயக்ஷ பிசாசம் வசிக்கிறது. உனது தேசத்தில் சற்புநிலைமையுள்ள ஸ்திரீகள் யாரேனுமிருந்தால் அவள் அந்தக்கற்பாறையின் கல்லைத் தொட்டமாத்திரத்தில் தண்ணி வேகமாயோடுமென்றுசொல்லி மறைந்துவிட்டது. அதுமுதல் எனக்குத் தூக்கமில்லை. மனக் கவலையோடு கூடியிருக்கிறேன். ஆகையால் நமது ராஜ்யத்தின் நாற்புறத்திலும் சென்று பௌர்ணமி அன்றையதினம் பதிவிருதா சிரோமணியால் அந்த கற்பாறை அகற்றப்படுவதைப்பார்க்க எல்லாரும் வரவேண்டுமென்று பிரசித்தப் படுத்த ஆஞ்ஞாபித்தான்.

4. உடனே தூதர்கள் இராஜ்ய முழுமையும் இவ்வாறு பிரசுரம் செய்யவே ஏராளமான மனிதர்கள் ஸ்திரீகள் குழந்தைகள் யாவரும் தங்களுக்கு நேரிடப் போகும் துன்பத்தை தெரிந்துகொள்ளாமல் வெகுசந்தோஷத்தை யடைந்தார்கள்.

பறைச் சப்தம் யாவர்களுக்கும் காதில் பட்டது. அரசன் விரைவாக வந்து தனக்காகக் கட்டப்பட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு கற்பாறையை நகத்தமுடியாமல் முன்னூறு ஸ்திரீகள் சிரஸாஞ்ஞை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டான்.

5. பின்னும் அநேகர்கள் அவ்வாறே உயிர்களை யிழந்திருக்கக்கூடும். ஆனால் ஒரு தைரியமுள்ள ஸ்திரீயானவள் எழுந்திருந்து கொடிய அரசனே! உங்கள் இராஜ்யத்திலுள்ள குயவனுடைய ஸ்திரீயின் கற்பு நிலைமையைப்பாருங்கள். அவள்தான் உயிரோடிருந்தாலும் சரி, அல்லது அதை யிழந்தாலும் சரிதான் என்று எண்ணி தேவர்கள் ஒத்தாசை செய்யட்டும் என்று சொன்னாள்.

6. அவ்வாறு சொல்லிக்கொண்டு அவள் அதை நன்றாய்க் கைப்பற்றி யிழுத்தாள். உடனே அது அசையாமையால் தனக்கு ரொம்பவும் அதைரியத்தை உண்டுபண்ணிற்று.

7. மகிராகுலனென்பவன் அவளைக் கொல்லும்படி ஆச்ஞாபிக்கும் சமையத்தில் அந்தப்பாறை சுவயமாகவே நகர்ந்தது; அடுத்த நிமிஷத்தில் அந்நதியினுடைய தண்ணீர் தடங்கலன்னியில் வேகமாய்ச் சென்றது.

8. இதனால் "பாதிவிருத்தியம்" என்ற சிரேஷ்டமான ஸ்திரீ தர்மத்தின் கௌரவத்தை நாம் தெரிந்துகொள்ளவில்லையா? ஆகையால் ஸ்திரீ சிகாமணிகள் பதிவிருதா லக்ஷணத்தோடு இருப்பது வெகு நலம். க்ஷேமத்தைத் தரத் தக்கது. இகத்திலும் பரத்திலும் சாதகமானது. ஆகையால் அனுஷ்டிக்கத்தக்கது.

C. H. C.

புலவர் காட்சி.

முற்காலத்திலுள்ள வித்வசிரோன்மணிகள் அற்பவுணவானாலும் அன்போடளித்தவர்களையும், இல்லை என்னாது கொடுத்த வள்ளல்களையும், மகுடமுடி மன்னர்களையும், அவர்கள் பூர்வ சரித்திரங்களை யாவரும்கண்டுணர அடிக்கடி ஞாபகமூட்டும்படி சிலையிலிட்ட எழுத்தைப்போல் எக்காலத்தும் அழியாததாக வரைந்ததினாலல்லவா பண்டைக் காலத்தார் பொய்யுடம்பு அழிந்தும் புகழுடம்பு அழியாதிருக்கின்றனர். அப்புண்ணிய சிலர்களை

நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்காவிட்டாலும் அவர்களுடைய பிரபந்தங்களை வாசித்தும் கர்ணானந்தமாய்க் கேட்டும் வருகிறோம் அஃதில்லாவிடிலோ இப்போது நமக்கெந்த புராண சாஸ்திரங்கள் தான் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக்காட்ட வியலும்? பேசாத ஊமையர்களைப் போலும், பசுபட்சி, ஊர்வனவைகளைப்போலும் நாமுமிருக்கவேண்டியதே! இவ்வளவு லோகோபகாரமாகப் பிற்காலத்தாருக்கு வேண்டுமென அப்புலவசிகாமணிகள் நினைத்தது மாத்திரமல்ல. அக்காலத்து அரசர்களும் தகுந்த பிரபுக்களும் அவர்க்கியல்பாக குடும்பசம்ரட்சணைக்குப் போதுமான ஊதியங்களும், அலங்கார ஆபரணங்களும், சுவர்ணங்களினாற் செய்து நவமணிகளால் இழைத்த சிவிகைகளும், யானை, குதிரை முதலிய வாகனங்களும், வெற்றிக்கொடி விருதுக்கொடிகளும், வீரமுரசுமுதல் சகல வாத்தியங்களும் கொடுத்து அடிக்கடி வேண்டிய உதவிகள்புரிந்து அவர்கள் மனதை உல்லாசப்படுத்தினதினாலேயே இப்பெரும் அரியபெரிய விஷயங்களனைத்தையும்செய்து முடித்தார்களேயன்றி மற்றெவற்றாலுமன்று. இவ்வளவு சன்மானங்களையுமேற்று புவிச்சக்கரவர்த்திகள்போற்றக்கவிச் சக்ரவர்த்திகளாயிருந்து வாழ்ந்தார்களே இவர்கள் கோடீஸ்வரரானார்களோவெனில் இல்லை. எதினால்? பொருளை லட்சியம் செய்யாததினாலேயே! அப்பொருளை லட்சியம்பண்ணாவிடினும் அவ்வளவு சன்மானமளித்த சிம்மாசன பதிகளைத்தான் பெரிதாக நினைத்தார்களோ! ஏழைகளானாலும், ஈனர்களானாலும் வித்தியாசம் பாராட்டாமல் அற்பபரிசானாலும் அன்போடளித்ததை வாங்கியுண்டுகளித்து உலாவித்திரிந்து உஜ்ஜீவித்து அவ்வரசர்களோடு இவ்வேழைகளையும் சமமாக்கிக் "கிழவியுங்காதம் குதிரையும்காதம் குலமன்னனே" என்று தாஷ்டீகமாய்ப் புகன்றிருக்கின்றார்களே! இஃதுணர்ந்த அரசர்கள் அப்புலவசிகாமணிகளை எதாகிலும் அகங்கரித்தார்களெனச்சொல்ல இயலுமோ! இயலாது! ஏன்? ஜீவகாருண்ய ஒழுக்கம் தப்பாது மேடுபள்ளமென்ற வித்தியாசம் நினையாது தன்னைப்போல் யாவரும் நன்னெறியடையவேண்டுமென்ற கொள்கையைக் கைப்பற்றி இருந்தவர்களாகையாற்றான். திருஷ்டாந்தமாக இரண்டுமனைவியர்களோடு வசித்திருந்த ஓர் குறவன் இளைய மனைவியோடு அதிகப் பிரீதியுடையவனாக இருக்குங்கால் ஓர்நாள் வேற்றூருக்குச் சென்றனன். இதைக்கண்ட இளையாள் நமது புருஷன் அருமையாக வளர்த்த பலாமரத்தை வெட்டிவிட்டு கணவன் வந்தவுடன் மூத்தவள் வெட்டினளென்று முடுக்கிவிடுவோமாகில் அவள்மேலிருக்கிற அற்பபக்ஷமும் அற்றுப்போகுமென்றெண்ணி அம்மரத்தைத்துண்டுதுண்டாக வெட்டிவிட்டனள். இதையறிந்த மூத்தவளும் இப்படிநீலிசெய்த அக்கிரமகாரியத்தைச் சகியாததோடும் புருஷன் இம்சைக்குள்ளாக வேண்டுமென்ற துக்கத்தோடும் அழுதுக்கொண்டிருந்தனள். அத்தருணத்தில் புலவர் பெருமாட்டியாகிய ஔவையாரும் அக்குறமாதிடஞ் சென்று அவள் மனக்குறையை அஞ்சேலெனக் கையமர்த்தி வெட்டுண்ட பலாமரத்தை நோக்கி,

வெண்பா.

கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்று யுயர்மரமாய்ச் —சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பலா.

என இக்கவியையுரைக்க, அந்த க்ஷணமே பலாமரம் தழைத்தோங்கிற்று. இதைக்கண்ட அக்குறமாதும் ஔவையாரை ஏற்றிப் போற்றித் தன்னாலியன்ற மூவழக்கழக்குத் தினையைப் பரிசளித்தனள். ஔவையும் அத்தினையை ஏற்றுத் தனது கந்தைத்துணியில் முடிந்து கக்கத்திலிடுக்கிக் கொண்டுகம்பர் முதலான கவிச்சக்கிர வர்த்திகள் நிறைந்திருக்கின்ற சோழ ராசன் சபைக்குவந்தனள். இராசனும் இஃதறிந்து புலவர் பெருமாட்டியாகிய ஔவையே! நீவிர் வைத்திருக்கின்ற மூட்டையென்னவென்று வினவ, ஔவையும் அச்சபையில் நாணமில்லாமல் மூட்டையை அவிழ்த்துக் காண்பித்து—

வெண்பா.

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழைக் குழக்குத்தினை தந்தாள்—சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்குமொரு கவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம்.

என்று இப்பாடலைச் சொன்னவுடன் அரசன்முதல் யாவரும் ஔவையின் நிதானகுணத்தைக் கண்டு சந்தோஷமடைந்தனர்களே யன்றி, திரஸ்கரிக்கவில்லை. இவ்வளவு மகிமை பெற்றிருக்கின்ற நமது ஆரியபாஷையைத்தூரி ஆங்கிலேய பாஷையைக் கோரிய சிற்சில பிரபுக்கள் தமிழ் வித்வான்களைக்கண்டால் இறுமாப்புடன் மௌனம் சாதிக்கிறதும், தமிழ்ப் பத்திரிகைகளைப் பார்க்கிறதில்லை என்றும், தமிழ் சாஸ்திரபுராணங்களைக் கண்டால் கழும்பை விழுங்கினவர்போல் தழும்பி ஒக்காளிக்கின்றனர். ஐயோ! இந்த அரிதான மானிடஜென்மமெடுத்து நமது தாய் சாஸ்திரங்களை அறியாது வாணாளை வீணாளாகக் கழிக்கின்ற அறிவிலிகாள்! இச்சரீரம் இந்த நிமிஷமோ! இதற்கடுத்த நிமிஷமோ! இந்த ஆவி நீங்கிவிடுமே! இந்த அற்ப சரீரத்தை நிலையெனநம்பிச் செல்வச் செருக்கினால் இறுமாந்து திரியும் பேதைகாள்! காலன்வந்துவிடுவானாயின் நீவிர் கோடானுகோடி பொருள்கொடுப்பினும் சரீரத்துக்கு நாசத்தைக்கொடுக்காமல் விடுவானோ? விடானே! அத்தகைய பாம்பின் வாய்த்தேரையாயிருக்கும்போதா, கபச் சுவாசம் மேலிழுக்கும்போதா, வீடுபோவெனக் காடுவாவென அழைக்கும் போதா, ஸ்மஸானத்தில் தனியாக அக்கினியில் வேகும்போதா, நமது பூர்வீக தர்மசாஸ்திரங்களை யுணர்ந்து நன்மையைக் கைப்பற்றித் தமிழ் சாஸ்

திர பண்டிதர்களுக்கு நன்கொடையளித்து அவர்களால் நிலைபெறத்தக்க புகழுடம்பைப் பெறப்போகின்றீர்களோ! இல்லையே, இத்தருணத்தில் எல்லா ஸ்திதியும் குறையுமுன்னே புகழுடம்பைப் பெறுதல்தான் அறிவாளிகளின் முக்கிய கடமையாகும்.

சான்றோர் தல விவேகபோதினி.

வர்த்தமானங்கள்.

திருக்குறுங்குடி.

திருநெல்வேலிஜில்லாவில் நாங்குனேரித்தாலூகாவைச் சேர்ந்த திருக்குறுங்குடியானது வசிப்பதற்கு ரமணீயமானவோரிடம். ஊரினருகில்ஓடும் நதியிலெப்போதும் தண்ணீர் வற்றாமல் பிரவகிக்கிறது. மாஞ்சோலைகளும் தென்னந்தோட்டங்களும் பூஞ்சோலைகளும் இவ்வூரில் நானாவிடங்களிலிருக்கின்றன. எப்பக்கம் நோக்கினும் சுபாவ ரமணீயமான சிலமலைகளின் காட்சியால் இவ்வூரின் சோபை பின்னும் அதிகரிக்கப்படுகின்றது. இவ்வூரில் சேரன்மாதேவி தாலூகாபோர்டாரவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலை நடந்து வருகிறது. மேலும் பிரம்ம ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ண சாஸ்திரிகளவர்களால் பெண் குழந்தைகளின் நன்மைக்காக வெகு ஆவலுடனும் முயற்சியுடனும் ஸ்தாபிக்கப்பட்ட கன்னிட்டா கீர்வாணவித்யாசாலையென்று ஸம்ஸ்கிருதபாடசாலை யொன்று வெகு அழகாக நடந்து வருகின்றது. சென்னை ஸம்ஸ்கிருதஸ்கூல் இன்ஸ்பெக்டரவர்களும் சமீபத்தில் சிலமாதங்களுக்கு முன்னரே வடக்கே நவத்வீபம் முதலிய விடங்களில் பெரிய பண்டிதசிரேஷ்டர்களால் வெகு மானத்துடனளிக்கப்பட்ட "வித்யாநிதி" "ஸம்ஸ்கிருதஸஞ்சீவந" என்கிற பட்டங்களையுடையவருமான ம-ா-ா-ஸ்ரீ, ஆர். கிருஷ்ணமாசாரியாரவர்கள் இந்த ஸ்கூலைப் பரிசோதனை செய்வதற்காக நேற்று விஜயம் செய்தார்கள். இன்ஸ்பெக்டரவர்கள் பரீக்ஷைக்கு வந்தவுடன் பெண்களெல்லோரும் எழுந்து வந்தனஞ் செய்தார்கள். பின்பு கீர்வாணபாஷையில் மதுரமான மொழிகளுடன் மனதைக் களிப்புறச் செய்யும்படி அமைக்கப்பட்ட பலவித பாடல்களைச் சிலபெண்கள் பாடினார்கள். பிறகு ரகுவம்சம், குமாரசம்பவம், ஹிதோபதேசம் முலிய காப்பியங்களில் இன்ஸ்பெக்டரவர்கள் குழந்தைகளைப் பரீக்ஷித்தார்கள். இன்ஸ்பெக்டரவர்கள் பரீக்ஷைசெய்ததில் குழந்தைகள் நன்கு விளங்கினார்கள். வடமொழியில் புதுவழியில் சிறுமொழிகளுடனமைக்கப்பட்ட நீதிபுகட்டக்கூடிய சுலோகங்களை நல்லவர்ணமெட்டுகளில் பாடும்படி சாஸ்திரிகள் கற்பித்து வருதல் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டுபண்ணிற்று. சங்கீதத்தில் இயல்பாகவே ஞானமுள்ளவர்களும் இனிய குரலுடையவர்களுமான சில கன்னிகைகள் ஒன்று சேர்

ந்து கவிசிகாமணியாகிய காளிதாஸரால் லலிதபதங்களுடனும் மதுர நடையுடனும் இனிய பொருளுடனும் சரசமாக இயற்றப்பட்ட சியாமலாதண்டகம், சியாமலா நவரத்நமாலிகை முதலிய ஸ்தோத்திரங்களை அழகாகப் பாடினார்கள். பிறகு எல்லாப்பெண்களுக்கும் யோக்கியதையை யனுசரித்து அநேக புஸ்தகங்களை ம-ா-ா-ஸ்ரீ, இன்ஸ்பெக்டரவர்கள் வெகுமதியளித்தார்கள். குழந்தைகளின் சாமர்த்தியத்தையும் ஸம்ஸ்கிருதம் அப்பியாசஞ் செய்வதில் அவர்களுக்கிருக்கும் ஆவலையும் பார்த்து ஆனந்தமடைந்து ஸம்ஸ்கிருத நாவல்களைக் குழந்தைகளுக்கு வெகுமதி கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்ஸ்பெக்டரவர்களின் பண்டிதகிளர்க்கான A. குப்புசாமி அய்யரும் மிகவும் களிப்படைந்து தன்னால் நிர்மிதமான "கமலனீகலஹம்ஸம்'' என்னும் தமிழ் நாவலை குழந்தைகளுக்கு வெகுமதி கொடுப்பதாகச் சொன்னார். பின்பு எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் முதலியவைகள் கொடுக்கப்பட்டன. மித்ரமணிகளே நமது கன்னியாரத்தினங்கள் கன்னிப் பருவத்திற் கற்றுக்கொள்ளவேண்டிய தவசியமென்பது நம்மெல்லோருக்கும் செவ்வனே விளங்கிய விஷயமல்லவா? அதிலும் கற்றுக்கொள்ளும் விஷயம் அவர்களுடைய வாழ் நாட்களில் மிகவும் உபகாரத்தையுண்டு பண்ணக் கூடியதாகவுமிருக்கவேண்டியது மிகவும் அவசியம். நமது மதத்தில் பலவித ஸ்தோத்திரங்களும் இதிகாசங்களும் புராணங்களும் வடமொழியிலல்லவா நிருமிக்கப்பட்டிருக்கின்றன? பாலியத்தில் கொஞ்சம்வடமொழியை அப்பியஸிக்கும் பெண்மணிகளுக்குப் பிறகு இல்லற நாட்களில் ராமாயணம் பாரதம் முதலிய கிரந்தங்களைப் படிப்பதற்கும் பாரியாதர்மத்தை நன்குணர்ந்து நற்குணநற்செய்கைகளுடன் தங்கள் வாழ் நாட்களை ஆனந்தமாகப் போக்குவதற்கும் எவ்வளவு உபகாரமாயிருக்கும்? ஆதலின், ஆரியமதத்தில் அபிமானமிருக்கு மெவரும் தங்கள் கண்மணிகளான பெண்மணிகளைக் கன்னிப்பருவத்தில் நமது ஆதியாகிய ஆரியபாஷையை அப்பியஸிக்கும்படி செய்யவேண்டும். தற்காலத்தில் பெண்கள் வடமொழியை அப்பியாசஞ் செய்வதற்கென்றே பாலிகாகீர்வாண பாடசாலைகள் திருநெல்வேலிஜில்லாவில் கல்லிடைக்குறிச்சி, திருக்குறுங்குடி, கடையம் ஆகிய இம் மூவிடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு கவர்ண்மெண்டி விருந்தும் சகாயம்பெற்று மிகவும் நன்றாக நடந்துவருகின்றன. காராக்குறிச்சியென்ற விடத்திலும் புதிதாக ஓர் வித்யாசாலை யேற்படுத்தி யிருக்கிறார்கள். மதுரைஜில்லாவில் பெரிய குளத்திலும் ஒருகலாசாலை கவர்ண்மெண்டாரால் சகாயஞ்செய்யப்பட்டு நடந்துவருகின்றது. இக்கன்னிகாசாலைகள் நன்கு செழித்தோங்கும்படியும் இன்னும் இவ்விதமாகப் பலகலாசாலைகள் ஏற்படும்படியாயும் நாம் நாமகளைப் பலமுறையும் துதிப்போம்.

ஓர் தமிழ்ப்பண்டிதை.

சென்ற டிசம்பர்மாதம் திரிச்சிராப்பள்ளியில் நடைபெற்ற "சைவ சித்தாந்த சபை" க் கட்டடத்தில் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் என்னும் பண்டிதை "திருநீற்றின் பொருள் என்பதைப்பற்றி ஓர் உபந்நியாசம் புரிந்தனர். இந்தம்மாள் தமது உபந்நியாசத்தில் காட்டிய கல்வியின் பெருமையைப் பற்றியும் புத்தி சாதுர்யத்தின் கூர்மையைப்பற்றியும் நாவன்மையைப் பற்றியும் புகழாதாரில்லை யென்றும் சொல்லப்படுகின்றது; பத்திரிகைகளும் வியந்து பேசுகின்றன. அப்போது சபைத்தலைமை வகித்த கொழும்புவாசி ம-ா-ா-ஸ்ரீ கனகசபைஎன்பவர் இப்பண்டிடைதை யாரிடம் இச்சபையார்கொண்ட மதிப்பிற் கறிகுறியாக சிலபுஸ்தகங்கள் ஸன்மான மளித்த தாகவும் சொல்லப்படுகிறது. கடைசியில்சோளவந்தானிலிருந்து வந்தபண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ சண்முகம்பிள்ளை யென்ற ஒருவர் பின்வரும் இனிய பாடலைப்பாடி அப்பண்டிதையின் அறவின்மாட்சியை வியந்திருக்கிறார்.

செல்லாயும் ஔவையுருத் தோன்றுதே யிந்நாளில்
செல்லாயும் கூந்தற் சிறுமருங்கு லாண்டாளாய்ப்
பல்லார் முன் நீற்றுப் பயன் விரிப்பக் கேட்டதற்பின்
கல்லாருங் கற்றார்போற் காட்சியின ராயினரே.

நகத்தினால் குணங்களை அறிதல்.

நீண்ட நகமுடையவன் நல்ல சுவாபமுடையவனா யிருப்பான். ஆனால் மற்றவர்களிடம் அதிகநம்பிக்கை வைக்கமாட்டான். குறுகலான நகத்தை யுடையவன் தத்துவ சாஸ்திரம் படிப்பதில் மனக்கவிவு உடையனாயிருப்பன். அனால் ஆயலாரோடு நீண்ட காலம் சமாதானத்தோடு இருக்கமாட்டான். அகலமான நகத்தையுடையவன் சாந்தமுள்ளவனும் தனக்கு மேற்பட்டவர்களுடன் பேசக் கூச்சப்பட்டவனும் பயமுள்ளவனும் இருப்பான். வட்டமான சிறுநகங்களை யுடையவன் பிடிவாத கோபக்காரனும் சந்தோஷமற்றவனும் மற்றவர்களைவிடத் தான்உயர்ந்தவனென்று அகாரணமாய் நினைத்துக்கொண்டு எல்லோரையும் பகைக்கும் சுபாவமுடையவனாயு மிருப்பான். சதைப்பற்றுள்ள நகத்தைபுடையவன் அமைதியுள்ளவனும், நித்திரை, போஜனம், இவைகளில் பிரியமுள்ளவனும், சுறுப்புப்பாக வேலைசெய்யாமல், கஷ்டமின்றிச் சொற்பவரும்படி வந்தாலும் போதுமானதென நினைப்பவனும் இருப்பன். வெளுத்தநகத்தை யுடையவன் துக்கப்பட்டவனும் உட்கார்ந்த இடத்தைவிட்டு நகருதற்குக்கூட முடியாதபடி அவ்வளவு சோம்ப லுள்ளவனாகவும், கல்வியின் பொருட்டு எதைவேண்மொனாலும் மனமொப்பிச்செய்யும் இயல்புடையவனும் அதன் நிமித்தம் என்ன கஷ்டம் வந்தபோதிலும் நஷ்டம் வந்த

போதிலும் ஒருபொருட்படுத்தாதவனும், ஆன்மதத்துவ ஆராய்ச்சியில் மிகவும் விருப்ப முள்ளவனுகவும் இருப்பான்:—இவ்வாறு பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒரு தத்துவ ஆராய்ச்சி சங்கத்தார் சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

கோவலன்:

பூலோகத்திலுள்ள சமையங்கள்:—தேச ஸ்திதி வள முதலிய வைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்யுஞ்சாலேக்குப் பிரசார்ணியாகிய டாக்டர் எச். ஜெல்லர் என்பவர் பூலோகத்திலுள்ள சர்வ சமயத்திற் குட்பட்ட ஜனங்களின் தொகையைப்பற்றி ஒரு புஸ்தகம் பிரசுரஞ் செய்திருக்கிருர். அதின்படி பூலோகத்தில் 154 கோடியே 45 லக்ஷத்து 10 ஆயிரம் ஜனங்கள் இருக்கிருர்கள். இதில் 53 கோடியே 49 லக்ஷத்து 40ஆயிரங் கிறிஸ்தவர்களென்றும், 17 கோடியே 52 லக்ஷத்து 90 ஆயிரம் மகமதியரென்றும், 10 கோடியே 8 லக்ஷத்து 60 ஆயிரம் எஹூதி ளென்றும், 30 கோடிகள் கன்பு மதஸ்தரென்றும் 21கோடியே 40 லக்ஷம் பிராமணர்களென்றும் 12 கோடியே 10 லக்ஷம் புத்தமதஸ்தரென்றும் இத்தோடு சிறுபான்மையான மற்ற மதஸ்தரென்றுங் கணக்கிட்டிருக்கிருர். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து பூலோகத்திலுள்ள ஜனங்களில் ஆயிரம்பேருக்கு 314 கிறிஸ்தவர், 114 மகமதியர், 7 இஸ்ரேல் ஜாதியார், 533 மற்ற மதஸ்தர்களென்று ஏற்படுகின்றது.

தமிழ்ச் சுருக்கெழுத்து:—இங்லீஷ் பாஷையில் ஷர்ட்டு ஹாண்டு என்ற சுருக்கெழுத்துகளிருப்பது போலவே தமிழ் பாஷையிலுஞ் சமீபத்தில் ஒருவர் சுருக்கெழுத்துகளைக் கண்டு பிடித்திருக்கிருராம். இதனுல் ஆங்கிலபாஷைப் பிரசங்கங்களை ஒன்றுகூடவிடாமல் பத்திரிகைப்பிரதிநிதிகள் உடனே எழுதிக்கொள்வதுபோல இனித்தமிழ் பிரசங்கங்களையும் அவ்விதஞ் செய்தல் சாத்தியமாகும். இதனுல் அறுபது அல்லது எழுபது வார்த்தைகளை ஒரே நிமிஷத்துக்குள் குறிப்பிட்டுக் கொள்ள முடியுமாம். இதனுல் தமிழ் நாட்டாருக்குப் பெரிய நன்மை உண்டாகும். இந்த முறையை நன்ருய்க் கற்றுத் தேர்ச்சி பெற்ற ஸ்ரீனிவாசராவ் என்பவர் சென்னையிலுள்ள போலீஸ் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளுகிற போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவுக்குத் தங்கம்:—பி அன் ஓ கம்பெனியைச் சேர்ந்த இந்தியா என்ற கப்பலில் 204000 பவுன் பெறுமான தங்கம் பம்பாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதாம்.

கிருஸ்துமதப் பிரவேசம்:—கும்பகோணத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்து வைஷ்ணவ வாலிபனொருவன் ஒரு சிறுமியை விரும்பி அவளை மணம்புரிந்து கொள்வதற்காகக் கிறிஸ்து மதத்தில் புகுந்து விட்டானும். காதலின் கொடுமைதான் என்ன ?